ஓம்

மங்களமுண்டாகுக!

திருச்செந்தூர் முருகன் துணை.

# பி. எஸ். ஜி. அரிஜன கன்யா
## குருகுல தர்மஸ்தாபன

# ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

கோவை, பூளைமாநகர்,

உயர்திருவாளர்

**பி. எஸ். ஜி. கங்கா நாயுடு**

அவர்களின் அறுபது ஆண்டு விழாவில்

**ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகத்தை**

அன்போடு வழங்கப்படும்


இஃது ஆக்கியோன்

பிரம்மஸ்ரீ M. R. சிஷ்யன்

**V. பொன்னுச்சாமி ஜோதிடன்**

கமலமுனி கணிதாரூட நிலையம்,

வடுகபாளையம்,

குடிமங்கலம் P. O. உடுமலை.

ஓம்

மங்களமுண்டாகுக!

திருச்செந்தூர் முருகன் துணை.

# முகவுரை.

திருவருள் நிறைந்த இப்பரத கண்டத்தின்கண் கம்ம வார் என்ற வமிசம் தென்னிந்தியாவில் கோயமுத்தூர் மதுரை திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் மிளிர்ந்து பிரகாச மாய்க் காணப்படுகிறது.

இவர்களின் வமிசப் பரம்பரை ஆய்ந்து பார்க்கும் போது ஆந்திர தேசத்திலிருந்து வந்தவரும் க்ஷத்திரிய தர்ம வைதீ கங்களை அனுஷ்டிப்பவருமாகவும் நம் முன்னோர்களால் தெரி கிறது.

இது இன்றைக்கு சுமார் 300 வருடகாலம் என்று தெரிகிறது.

இதிலும் கோவையை அடுத்த பூளைமாநகரில் காங்கல் லார் வமிசத்தில் பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அவர்கள் குடும்பத்தில் எனக்கு சுமார் 20 ஆண்டுகளாக குடும்பத்தின் நன்முயற்சியும் தர்மஸ்தாபனங்களும் விவசாயம் வியாபாரம் கல்வி கைத்தொழில் தர்மங்களும் அறிவும் ஆற்றலும் உயர்ந்து காண்பது எனக்குத் தெரியும்.

ஆனால் நான் ஒரு ஜோதிடன் சிறிது கவி புகலவும் தெரியும். சுமார் 10 வருஷங்களுக்கு முன் பி. எஸ். ஜி. குடும்பத்தில் திரு பி. எஸ். ஜி. கேங்கா நாயுடு அவர்களுக்கும் மற்றும் அவர் குடும்பத்தார்க்கும் ஜாதகங்கள் எழுதிக் கொடுத்துள்ளேன். அப்படி எழுதும்போது எந்த ஜாதகத் திற்கும் ஜாதக நகல்களைப் பத்திரப்படுத்தி வைப்பது எனது வழக்கம்.

அப்படியிருந்த நகல்களை சென்ற பங்குனி மீ ஒரு காரியார்த்தமாகப் பார்க்கும் போது திரு நாயுடு அவர்களின் ஜாதக நகல் கிடைத்தது. அதைப் பார்த்தவுடன் 60 ஆண்டு

சம்பூர்ணம் ஆகிறதென்றும் அதற்கு சஷ்டியப்தபூர்த்தி சாந்தியும் அக்காலத்தில் விழா ஞாபகார்த்த தர்மங்கள் செய்வாரென்றும் எனக்குத் தோன்றியது. இவ்வருடம் சித்திரை மாதம் பூளைமாநகர் போய் திரு நாயுடு அவர்களைப் பார்த்து இதுவிஷயங்களை அளவளாவி யோசித்ததில் 60 ஆண்டு விழா மணம் செய்வதாகவும் அப்போது பல தர்ம கைங்கரியங்கள் செய்வதாகவும் 59 ஆண்டு சம்பூர்ணமாகி 60 ஆண்டு ஆரம்பிக்குங்காலத்திலேயே அரிஜன கன்யா குருகுல வித்யாசாலை நிறுவியும் அது நடைபெற்று வருகிறதென்றும் சொன்னார்கள். நான் விழா காலத்தில் அரிஜன கன்யா குருகுல தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் சதகம் என்ற புத்தகம் ஒன்றெழுதி உலக உபகாரமாகவும் வந்த பிரமுகர்களுக்கு அன்புடன் வழங்கலாமென்றும் நான் கூறியதில் திரு நாயுடு அவர்கள் அதற்கிணங்க, திரு பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்களின் நினைவு மலர் ஒன்றை பலர்எழுதியிருந்ததை மனமுவந்து கொடுத்தார்கள்.

அதைப் பெற்றுக்கொண்டு அன்றுமுதல் இன்றளவும் திரு நாயுடு அவர்களின் குடும்பத்தின் மேலுள்ள அன்பினாலும் தர்மஸ்தாபனத்தின் மேலுள்ள அவாவினாலும் எழுதத்துணிந்தேன்.

இந்நூலில் சதகமுறையான நாட்டுச்சிறப்பு முதல் நகரச்சிறப்பு அரசர் நீதி அந்தணரொழுக்கம் பி. எஸ். ஜி. தர்மத்தின் மகிமை மணநாள் சுப சகுனம் பஞ்சவர் யோகம் பதினெண் புராணம் முப்பத்திரண்டு தருமம் இன்னும் பல உலோகோபகாரமான விஷயங்கள் அடங்கியுள்ளன.

இதைக் கண்ணுற்ற முத்தமிழ் திலகம் புரிசை உயர்திரு முருகேச தேசிகனார் சாற்றுக் கொடுத்த அவர்கட்கும் வடுகபாளையம் ஸ்ரீ V. வெங்கிடசாமி நாயுடு அட்வகேட் **B. A. B. L.** அவர்கள் நல்லுரை கொடுத்துதவியதற்கும் வேட்டமாநகர் உயர்திரு குப்புசாமி பாகவதர் அவர்கள் கொடுத்த சாற்றுதலுக்கும் மற்றும் சாற்றுதவிய அன்பர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக. மதிப்புரை கொடுத்த C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும், திரு. பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு அவர்களின் அறுபதாண்டு விழா நவரத்தின மணமங்கல ஆசிர் வசனப்பாவும், சதகமும் அழகாகவும அதிசிக்கிரமாகவும் செய்து உதவிய பி. எஸ். ஜி. அச்சகத்தார்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

# மதிப்புரை.

---

வடுகபாளையம் கமலமுனி கணிதாரூட நிலையம் திரு. V. பொன்னுச்சாமி சோதிடர் இயற்றிய ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம் என்ற நூலைப் பார்த்து மகிழ்ந்தேன். சதகம் என்பது தமிழில் வகுக்கப்பட்ட 96 பிரபந்த வகைகளுள் ஒன்று. கொடை, வீரம் முதலிய நற்குணங்கள் மிக்கவோர் தலைவனை முன்னிட்டு யாதாமொரு தெய்வத்தின்மேல் இஃது இயற்றப் படுதல் மரபு. பெரும்பாலும் 100 பாட்டுக்கள் கொண்டு முடியும்; பதினான்கு சீர்களும் அதன் மேலும் கொண்ட ஆசிரிய விருத்தப்பாக்களால் பாடப்பட்டு ஒவ்வொரு பாட்டிலும் பல நீதிகள் புலப்பட விளங்குவது இந்நூலின் இயல்பு.

பி. எஸ். ஜி. குருகுல அரிஜன தர்மஸ்தாபனம் முதலிய பல பெரிய பொதுநலத் தாபனங்கள் கண்டு நடத்திவரும் ஸ்ரீமான் பீளமேடு பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு அவர்களைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூல் அவரது அறுபதாவது ஆண்டு விழாவின்போது வெளிவருதல் மிகப் பொருத்தமாகும். பாட்டுக்கள் தோறும் பற்பல நீதி வாக்கியங்களும் மக்களறிய வேண்டிய பற்பல அறிவுரைகளும் உண்மைகளும் காணப்படுதல் இந்நூலாசிரியருடைய சிறந்த அனுபவஞானத்தை விளக்குகின்றது. ஆசிரியர் கணிதாரூட சோதிட வல்லுநரானபடியால் மக்களுக்குப் பயன்படும் சோதிட உண்மைகள் பலவும் இந்நூலினுள் அங்கங்கும் விளங்குகின்றன. இந்நூல் செம்பாகமான இனிய எளிய தமிழ்நடைச் செய்யுட்களாலமைந்திருப்பது பலர்க்கும் பயன்பட உபகாரமாகும்.

இந்நூல் நின்று நிலவி இதில் சம்பந்தமுடைய எல்லாருக்கும் எல்லா நன்மைகளையும் ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் ஈந்தருளுவாராக. இந்நூல் சிறக்க! இதன் தலைவர் சிறந்தோங்குக! அவரது நல்லறங்களெல்லாம் பெருகுக!

சேக்கிழார் நிலையம்,<br>கோயமுத்தூர்,<br>12—9—1948.

இங்ஙனம்,

**C. K. Subramanian,**

(கோவை வழக்கறிஞர் சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் — பெரிய புராணப் பேருரை ஆசிரியர்.)

# நல்லுரை.

அன்புடைய எமது நண்பர் பிரம்ம ஸ்ரீ **M. R.** சிஷ்யன் **V.** பொன்னுச்சாமி ஜோதிடர் ஆராய்ந்து எழுதுவதாவது

கோவையை அடுத்த பூளைமா நகரில் வார்குல கொடை வள்ளல் ஸ்ரீ பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவில் அன்புகொண்டு வழங்குவதற்காக பி. எஸ். ஜி. ஜி. அரிஜன கன்யா குருகுல தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம் எழுதியதை நான் கண்ணுற்றதில் முன்னுற்ற சதகங்களை தழுவியும் மற்று உலக உபகாரமாக அரியபுதிய விஷயங்களைப் புகுத்தி யுள்ளார்.

எங்ஙனமெனில்:- இவர் வேதங்களிற்குறிய ஆறு அங் கங்களில் ஒன்றாகிய நேத்திரமான சோதிட நூல்களையுணர்ந் தும் கவி இனிமையும் தெரிந்தவருமாதலால் சதகத்திற்குறிய நாட்டுச் சிறப்பு முதல் மங்களம் வரை நூறு செய்யுள்களும் ஒவ்வொன்றும் உலகத்திற்குப் பயன்தரக் கூடியவைகளாக இருக்கின்றன. இது உயர்திருவாளர் பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு அவர்களின் நன்முயற்சியென்றே தெரிகிறது.

இந்நூலை வெளியிட முன்வந்ததற்கு எனக்கு பெரு மகிழ்ச்சியை விளைக்கின்றன. இந்நூலைத் தொகுத்த ஆசிரி யருக்கும் அச்சிட்டு உதவிய ஷை திரு நாயுடு அவாகளுக்கும் தமிழ் உலகம் கடமைப்பாடுடையது.

பின்னும் திரு நாயுடு அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவில் ஜோதிடர் வாழ்த்திப் பாடித் தந்த நவரத் தின மணமங்கள ஆசிர் வசனப் பாக்களைப் பார்த்ததில் அதிக சந்தோஷப் படுகிறேன்.

இன்னும் பல நூல்களும் மங்களப் பாக்களும் எழுதும் படியாயும் இதுபோன்ற நூல்களை அச்சிட்டு உதவும்படியா யும் ஜோதிடருக்கும் திரு நாயுடு அவர்களுக்கும் ஊக்கமும் நீண்ட ஆயுளும் உண்டாகுமாறு எல்லாம்வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

**A. வெங்கிடசாமி நாயுடு,**
B. A., B. L., அட்வகேட்,
வடுகபாளையம், குடிமங்கலம் P. O.,
உடுமலை தாலூக்கா.



ஓம்

மங்களம் உண்டாகுக.

திருச்செந்தூர் முருகன் துணை.

**பி. எஸ். ஜி. குருகுல அரிஜன**

**தர்மஸ்தாபன**

# ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்

---

கணபதி காப்பு

திருவளர் தர்மஸ் தாபனந் திகழ
உருவளர் கரிவரதன் சதகம் மதை
மருவளர் படியினில் மாண்பொடு செப்பத்
தருவளர் ஐங்கரன் றாள்பணி வோமே.

கரிவரதன் துதி

சீர்பூத்த தர்மமதை ஸ்தாபனமாய்ப் புவிமீது செய்து வைத்த
பேர்பூத்த பி. எஸ். ஜி. பிரபலமாங் குடும்பத்தின் பெருமை தன்னை
ஏர்பூத்த கரிவரதன் சதகமதி லின்பமுடனினைத் துரைக்க
நார்பூத்த பூளைநகர் தன்னில்வளர் கரிவரதன் நற்றாள் போற்றி.

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### அவை யடக்கம்

பூவினில் பி. எஸ். ஜி. தர்மஸ்தா பனமதை
புனிதகரி வரதன் மீது
புகழ்பெற்ற சதகமென ஆவலாய்த் தமிழிலே
புகன்ற தெவ்வா றென்னிலோ
தாவிவருங் கங்கமால் அன்புகொள வேட்கையால்
தகுதர்ம ஸ்தா பனத்தில்
தங்கிடுங் கவர்ச்சியால் கரிவரதன் கிருபைகொள
தகைமை யுளஇன் நூலையே
மேவினன் கருடனோடு சிறுசிட் டையானது
விண்மீது தாவுதல் போல்
விளங்கு சபைதன்னிலே சதகமா யோதினேன்
மேலோர்கள் பிழை பொறுப்பீர்
மாவுடைய பூளைநகர் பி. எஸ். ஜி. கங்கமால்
வள்ளல் செய்தர் மத்திலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே!

### நாட்டுச் சிறப்பு

திருவாணி கௌரியுஞ் செயல்கொண்டு நடனமிட
சிறுவாணி நீருல வவும்
செறிமுகில்கள் பொழிவதால் பல்வளமு முயர்வாகி
சிறந்திடுங் கொங்கு நாட்டில்
பெருலாப முடையநல் வாணிபச மர்த்தரும்
பிரபலக் கொடைவள் ளல்கள்
பிரியசன் மானரும் நிதி மந்த்ரி கீர்த்தியுள
பேர்பெற்ற வித்வான் களும்
நெறிவாழுங் கோனியம் மன்பசு பதிவிஷ்ணு
நிகரிலா ஆல யங்கள்
நிலைகொண்டு உயர்தரக் கலைபயி லுங்கூடமும்
நிதிகாட்டு மில்களுந் தான்
மருமன்னர் சமுகமமை கோவைநக ரதுகார்ந்த
மணி பூளை மாநகரை யே!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 1

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### நகரச் சிறப்பு

தூயமெஞ் ஞானகுரு பீடமுந் தெய்வதல
துன்னு நதிகுளங் கூபமுஞ்
சுந்தர மறையுணர் பெரியோருங் கிதர்கவி
சொலுவ லர்ரத சாரதி
நேயமுள தனவணிகர் விதரணவி வேகமுளர்
நிறைந்த சினிமா மாடிகள்
நீடுமுக் கனிசோலை மைசூரா யுர்வேத
நிலைகொண்ட பண்டி தர்களும்
தோயு நாற்குலமு முயர்வாகி யூ. எம். எஸ்.
தேரோடு வீதி விரிவாய்
துங்கசிங் காரமுள சர்வஜன கலைகூடந்
துன்னுகைத் தொழிற் சாலையும்
வாயில்மேற் செல்வமும் மணிபூளை மாநகரில்
மன்னு சந்ததி யோங்கவே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 2

### இதுவுமது

ஆகாயக் கப்பல்கள் அணியா யுலவிடும்
அருமை நிறைஸ்டுடி யாக்களும்
அழகுபெற பட்டுடை ரத்னபணி சொர்னமய
மணிகொண்ட கடை வீதியும்
வாகானபங் களாக்கள் வஞ்சியர்கள் கலைமாடம்
வல்ல மைவியா பாரமும்
வயணமுள அடிசிலொடு வாஞ்சையா யுண்டுநல்
வசதி யாய்த் தங்குமிடமும்
தேகாதிசுக முடைய மருத்துவ சாலையும்
தினம் பிள்ளைபெறு வித்தலும்
தேரியவழக் கறிஞர் திருவாழுந் தேன்ஸ்மில்
திகழுபுகை வண்டி தொடரும்
மாகாய வாணியு மங்கங்கே நின்றுசொல
வண்மை யுளபூ நகரையே!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 3

இதுவுமது

பொன்பொலி யுந்தேவியும் வெண்டாம றைத்திருவும்
பொறை பெருந் தருமவல்லி
புனிதமாய்க் கூடிமகிழ் கொண்டுகண் ணோக்கவே
புகழ்தந்த பூளை நகரில்
மின்பொலியுங் கனல்சென்னல் மிளிருவிச் சித்திரம்
மேன்மை யுளமாட கூடம்
மிருவூதியம் அடைய வியாபார முறையுளோர்
மேலான கிருஷி வல்லோர்
தென்பொலியுஞ் சர்வஜனப் பள்ளியும் பி. எஸ். ஜி.
செய்திடுந் தொழிற் கல்வியும்
சிறந்திடுங் கல்லூரி அரிஜனப் பள்ளியும்
சேர்ந்திடு மிப்பதி யினில்
மன்பொலியும் மங்கம்மாள் மருத்துவ சாலையும்
மாணவர் விடுதி தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 4

இதுவுமது

பொருள்தரும் பஞ்சாலை நூல்மில்கள் திகழவே
புகழு குருகுல வாசமும்
புனிதபெரு மாள்கோவில் சொர்க்க வாயில்களும்
பொருது பட்டா ளேஸ்வரி
அருள்தரும் மாரியம் மன்ஆல யங்கட்டி
அல்லாம லின்ன முந்தான்
அழகுதரு வேடபதி யிற்சுகா தாரமாம்
ஆஸ்ரமங் கட்டி வைத்தும்
பெருமகிழ் கொண்டு ஆரம்ப மாம்பள்ளி
பிரபலக் கிருஷி பலவும்
பிரியமொடு பழனியில் மங்கம்மாள் பெயராலே
பேணுபூ மண்ட பந்தான்
மருள்தவிர்த் திடக்கட்டி மாபுண்ய மடையவே
மாண்புடன் செய்த தாலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 5

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### திருவருள்

செந்திருக டாக்ஷமுண் டாலெவர்க்குநற்
சிறப்பு மேம்பாடு முண்டு
செல்லும்வழி எல்லாம் பெரும்பாதை யாகவே
செல்லாத வார்த்தை செல்லும்
சிந்தைதெளி வந்திடுந் திரவியமு மெளிதிலே
சிக்கிடுஞ் செல்வ மோங்கும்
சென்றவிடந் தன்னிலே ஜெயமுண்டு மனம்போற்
செலுத்தும் வல்லமையு முண்டு
பந்தியிலு யர்ச்சியாம் பார்வேந்தர் மெச்சுவார்
பகையாளி வுறவென் பனே
பந்துஜன மேன்மையைத் தந்திடுவா ரறுசுவை
பகருசுக போஜன ந்தான்
மந்தரமி குந்தஸ்ரீ பி. எஸ். ஜி. எண்ணங்கள்
மன்னு நற்றர் மத்திலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 6

### அரசர் நீதி

வாழுங்குடி படையினில் வபிமான முடையராய்
வகை மந்திரா லோசனை
வள்ளலெனக் கொடையிலும் அவரவர்க் கேற்றநல்
மரியா தைசது ருபாயம்
மீழும்படிப் பொருமை தீரவி சாரணை
விளங்கச் செய்தவை காத்தலும்
மிகுமேன்மை அறிவுள்ள அமைச்சரைச் சபையினில்
மேவும்படிச் செய்தலும்
நீளும்ப டிக்காலம் இடமறிதல் வலிகண்டு
நிலையான அன்பு கொண்டு
நிதிகடமை எளிதாக வாங்கிச் செங்கோலினை
நிறைகோ டாமுறை தன்னிலே
வாழுமுடி மன்னர்முன் பி. எஸ். ஜி. தர்மங்கள்
வழங்கி நின்றது கண்டுமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 7

### அந்தணர் இயல்பு

சூரியனு திக்குமுன் னதிகாலை நதிமூழ்கல்
சுருதியொடு காயத் ரியைச்
சொல்லிச் செபித்தலும் ஆகமபுரா ணங்கள்
சூட்சுமந் தனையு ணர்தலும்
பாரினில் யாகாதி கருமங்கள் பண்ணலும்
பலதெய்வ வழிபடு தலும்
பண்பாக ஓதலும் ஓதிக்கொ டுத்தலும்
பாகமொடு வேட்ட லுந்தான்
நேரில்வேட் பித்தலும் ஈதலுந்தான் கொள்ளல்
நிறை கொண்ட அறுதொழிலுடன்
நேர்மையொடு சிற்பர்செய் சிலைகளுக்குப் பூசை
நீதியாய்ச் செய்வ துந்தான்
வாரிசூ ழுலகினில் அந்தணர்க்கு ரியதாம்
மங்காமற் செய்த தர்மம்!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 8

### இலக்ஷ்மி வாசம்

குணமான மன்னர்பாற் குளிர்சோலை தன்னிலுங்
கூட்டமுள கோவணி யினில்
குலவுமணப் பந்தலில் கோகனக மலரிலும்
கூறும் ரணவீரர் பாலும்
இனமான கங்கையி லிமாசலந் தன்னிலும்
எழில்வேத மந்தி ரத்தில்
இதமான பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
இன்சொ லுளமாந்த ரிடமும்
உணவான அன்னத்தில் உத்தமப் பெண்களிடம்
உயர்வான ரதந்தன் னிலும்
உந்திபூத் தோன்மார்பில் ஓங்குசெந் நெல்லிலும்
ஒளிருமணி மாடந் தனிலும்
மணமான லக்ஷிமி குடிகொண்டு வாழ்வாளே
மன்னு நற்றர் மத்திலே!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 9

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### குடும்ப ஒழுக்கம்

மேதினியில் வார்குலங் காக்கலார்/காங்கலார் என்கிற
மேலான வம்மி சத்தில்
மிளிரும் பி. எஸ். ஜி. கோ விந்தமால் மங்கம்மாள்
மேன்மையொடு மால் தன்னையே
நீதியாய்ப் பூசித்து விரதமொடு தவமுற
நெடுமா லினரு ளினாலே,
நிறைகொண்ட கனகமுன் னவனென் னும்வேங்கிட
நிர்மல மனச் சாமியும்
சோதியுள தெய்வத்தை வணங்குமுன் நின்றிடும்
சுந்தரன் நாம மென்ன
சொலுநீதி விரிவாக புருஷார்த்த மறைகின்ற
சொகுசு நிறை ரங்கசாமி
வாதியுள மன்னர்களை வசிகரஞ் செயவல்ல
வளர்தாதா கங்கா வேட்கு
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவரதனே! 10

### இதுவுமது

திருவோங்கு தரளமுன் னவனென்ன மணமாக
திறமான மோட்ச காலம்
சிந்திக்கும் நாராயணா வெனச் சிறப்பாக
ஜெகமீ திலே ஜெனித்தும்
தருவோங்கும் பெற்றாளெனப் பெற்றரங் கம்மாள்
தவத்துடன் உதித் தார்களே
தகுந்தர்ம ஸ்தாபனத் துக்கா யொருபங்கு
தந்துபுகழ் பெற் றார்களே
உருவோங்குஞ் செல்வமுள பெரியோர்கள் யாவரும்
உற்று நோக்கிட வேண்டுமே
உலகிலிது போலவெகு தருமங்கள் செய்துமே
உயர்வான புண்யம் பெருவீர்
மருவோங்கு மிவர்கள்நல் வழிகாட்டி யாகவே
மன்னிய தாலுலகின் மேலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 11

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### பி. எஸ். ஜி. தர்மத்தின் மகிமை

கருணையொடு மாதவஞ் செய்துஅத னற்பயன்
கண்ட முனிவோர் போலவும்
கன்னியமா யடுத்தோரைக் கார்த்துமே வலர்தம்மை
கண்டிக்குஞ் சக்ரம் போலும்
தருமநெறி யுளசபையில் மெச்சவே கவிவாணர்
தான்செய் பிரசங்க மதுபோல்
தாரணியில் மனுநீதி தவராத முடிமன்னர்
தருகின்ற பரிசு போலும்
பெருமையொடு வுடுகோடி நடுவாகத் தோன்றிடும்
பெட்புடைய மதி போலவும்
பிரபல பகிரதன் குலத்துங்கன் என்னவே
பேசும் ஒருபிள்ளை போலும்
வறுமையிலாக் கோவைமா நகரிலிலாத் தருமங்கள்
வகுத்தார் களின்ப மோடு
மகிழ்வான பி. எஸ். ஜி. மன்னர்மேல் அன்பான
மங்களக் கரிவர தனே! 12

### உலகினில் உயர்ந்தவை

பூவினிற் றாமரை புனலினிற் கங்கையே
பொருப்பி னில்மகம் மேருவே
புகழ்தருவிற் சந்தானம் போகத்தி லிந்திரன்
புனித தலம்பே ரூரதாம்
மேவிடும் பொறையினிற் றருமராம் அதிபலம்
மிகுந்த வன்பீம னாகும்
மிக்கவில் வித்தையில் அர்ஜுனன் கொடையினில்
மிளிர் கர்னன் தானென்பயே
தாவிடுஞ் சாஸ்திரந் தன்னிற்ச காதேவன்
தமிழினி லகத்திய ன்றான்
தையலில் அனுசூயை தந்தியி லைராவதம்
தனிமந்த் ரம்பிரண வந்தான்
மாவுடைய பி. எஸ். ஜி. தர்மமே உயர்ந்ததென
மண்மீ துரைத் தார்களே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 13

## வேளாளர் சிறப்பு

மேழிகைக் கொண்டுகார் முனையினு லுழவுசெய
மிக்கவே ளாண்மை யதனால்
வேதியர் யாகமும் ஆலயப் பூசையும்
மேன்மை தவமுடை யோர்செயல்
நீளியுல கில்மாத மும்மாரி பொழிவதும்
நீதி யாய்ப்புவி செழிப்பும்
நிறைமன்னர் கப்பமுஞ் செங்கோல் செலுத்தலும்
நிதிவணி கர்பெரு லாபமும்
தோழிமணங் கல்வியுந் தொழிலாளர் மேன்மையுந்
தூய தருமந் தானமும்
துதிசொலுங் கவிவலர் புராணப் பிரசங்கமும்
துலங்கு முத்தமிழ் கீர்த்தியும்
வாழுமு லகிற்சூரர் வலியிவை எல்லாமும்
வேளாள ருழவு தொழிலால்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 14

## வேளாளர் தொழில் பத்து

வேளாளர் தொழில்பத்தும் விள்ளுவே னன்பாக
விரியானை வழி நிற்றலும்
மேவுமாண் வினைதேடல் கைகட னாற்றலும்
வினை மனத்தில் லாமையும்
தாழாண்மை யாகவே சுற்றமது போற்றலும்
தனைநீங் காப்பிர யத்தனம்
தருமென்று மன்னிறை தருதலு முயர்வாக
தாழ்வில் ஒற்றுமை கோடலும்
வீழாகா தொழுக்கமும் விருந்தோடு உண்ணலும்
விதமான தொழில்கள் பத்தும்
விளக்கமாய்ச் செய்வதே வேளாளர் தொழிலென
விண்ணவ ருரை செய்தனர்
வாழ்புவியில் பெயர்பெற்ற பி. எஸ். ஜி. ஸ்தாபனம்
வந்ததால் தருமத்தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 15

## உழவு செய்யும் நாள்

மேழிகைப் பிடித்துழவு செய்யுநாட் கூறுவேன்
மிளிர் பூருவந் தன்னிலே
மேலான மதிபுந்தி குருவெள்ளி வாரமாம்
மிக்க துதியைத் திரிதியை
நீளுபஞ்சமி சப்ததசமி யேகா தசி
நிதிவளர் திரியோ தசி
நிகழ்புனர்தம் பூசமும் ரோகணியத் தம்மூலம்
நேர னுஷம்ரே வதியினில்
வாழுமிடபம் மிதுனங் கடகங்கோல் கன்னியும்
மகர மீனந் தன்னிலே
வழங்கு யோகினிபூமி ஆகாச மாகாது
வடிவாக பூமி தனையே
வாழவுள பூசித்தா லதிகவிளை வுண்டாகும்
வண்மை தர்மஞ் செய்யவே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 16

## விதை விதைக்க

முதலாகக் கூறிய முறையாக சுபர்வாரம்
முழுதுள்ள திதிக ளோடு
மொழியான பௌர்ணமி பூசம்ரோ கணிமகம்
மூலம் அத்தஞ் சோதியும்
அதமிலா உத்திரத் திரயமும் அனுராத
மாதிரை சதையங் கடைநாள்
அணிமிது னங்கடக மிடபசிங்கந் துலாம்
அழகு மகரம் மீனமும்
இதமான ஓரையின் ஏழிடங்கவி நில்லா
திருந் தெட்டுஞ் சுத்தமாக
இனிமையாய் வித்துத் தெளித்தாலே மிகுநன்மை
ஏற்றமாய் விளைவதாலே!
மதிபுர பட்டணம் அதிதர்ம கட்டடம்
மண மண்டபந் தன்னையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 17

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### அளவிடக் கூடாதது

கடலினு ழுத்தையுங் கலையுளோர் கவிதையுங்
கனவேங் தர்சிந்தை தனையும்
களருமா னிடஜென்மம் புனலிலெழு அலையையும்
கண்ணியப் புருஷர் போகம்
கடவுளின் செயலையும் புவியிலுள மணலையும்
கனசித்தர் உள்ளத் தையும்
காணுபல ஜெந்துவெண் வானினுயர் நீளமும்
கவலைமிடி யாளர் மனமும்
மடவரிட மனதையும் மலைகள்நிறை தன்னையும்
மாரிபனி பெய்துளி யையுன்
மத்தர்மன நினைவையும் மண்ணுண்ட மன்னரும்
மரந்தன்னி லத்தி மலரும்
மடல்பொருது பி. எஸ். ஜி. தர்மஸ் தாபனமது
மண்மீதில் அதிக மாமே!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 18

### பொருள் செய்வகை

பூர்வஜென் மத்தினிற் செய்தமிகு புண்யத்தால்
பொருள் வந்துசேர்ந் ததானல்
புனிதமுடன் அதுஒன்று நூறு ஆயிரமாகிப்
புகழ்கோடி சேர்க்க வேண்டும்
பார்புவியி லுண்ண வேண்டும்நல் லாடைபணி
பண்பாய்த் தரிக்க வேண்டும்
பாவலர் நாவலர் கவிஆது லர்க்குதவி
பண்ணி புகழ்தேட வேண்டும்
சீர்மிகுந் தருமங்கள் செயவேண்டும் நிலையாக
செப்பு சத்திரஞ் சாவடி
செய்துஅழி யாமலே மோட்சவழி தன்னையே
தேட வேண்டும் என்பரே
மாரிபொழி பூளைமா நகரமதில் பி. எஸ். ஜி.
மன்னர் செய்தர்ம த்தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 19

## எண்வகைக் காட்சிகள்.

திரைகடல்சூழ் புவியில் மானிடராய்ப் பிறந்திடில்
திகழு மெண்காட்சி தனையே
செய்வேண்டும் ஆத்மநிதி யிவையிங்கு அறைகுவாம்
செவிகொண்டு கேட்க வேண்டும்
நிறைகொண்டு தர்மத்தை ஐயமில் லாமலே
நிக்ஷய மாய்ச் செய்வ துந்தான்
நிறந்தரம் பிறர்பொருளி லவாசிறிது மில்லாமை
நேர்படுதலும் உவர்ப்பு
துரையிலா தறிவுடைமை மூடமறுத் தலும்
துன்னு பழிதனை யகற்றல்
சோர்வுற்று அழிவோரை நிலைநிற்கச் செய்வதும்
தூய தர்மம் விளக்கல்
வறுமையுளர்க் குதவிடும் பி. எஸ். ஜி. தர்மங்கள்
வாழ்விக்கும் முனிவோ ருரை
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 20

## மண நாள்

திருவோங்கும் மானிடர்தம் திருமணஞ் செய்யு நாள்
செல்வருக் கொற்றை ஆண்டில்
திருமகாட்கி ரட்டையா முத்திரா யனம்நன்று
சிறுமிவில் நண்டுங் குடம்
தீதான மாதமிது திங்கள்நாள் ரோகணி
தேள்மகம் மத்திபந் தான்
திவ்யமூ லம்மூன்று உத்திரம் ரேவதி
சேர்க்கலாம் உத்தமந் தான்
அருளோங்குஞ் சிராவணம் புனர்தமபூசஞ் சதையம்
அவிட்டமும் மத்திபந் தான்
அல்லாத உடுவாகா மால்வெள்ளி பொன்றிங்கள்
அழகு நலவா ரமாகும்
அருக்கநாள் மத்திபம் அமரப க்ஷந்தனில்
ஆகா ததன் பஞ்சமம்
அமைமத் திபம்புவா யிருத்தையட் டமிதள்ளு
அருமை யுளசுப திதிகளும்

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

உருவோங்கும் வீணைகர்க் கடகமுங் கன்னிகோல்
ஒளிர் சிலைகும்ப மாகும்
உயர்வாள குருசுங்க னத்தமன மாகாது
உணர்மொன் னன்பார்வை நன்றும்
உசனன் மால்மந்திரி மறையாமல் வேறிடம்
உற்றுபெல மானலும் மாம்
ஓங்குதன மூன்றினி லம்புலிமிக நன்று
ஒளிர் மூன்றுபன் னென்றினில்
மருள்கொண்ட பாவர்க ளிருக்கலா மிதன்மேலே
மலமாதம் ஆகாது காண்!
மாமங்க வருடமும் மாதர்கள் பூத்தநாள்
மறவாது யிதை நீக்குவாய்
மணியாக ஏழெட்டு சுத்தமுள லக்கினம்
மன்னிவை வேட்டல் காலம்
மகிழ்வான பி. எஸ். ஜி. தர்மமேல் அன்பான
மங்களக் கரிவர தனே! (21)

### விவாக சக்கரம்

இரவிதானி இருந்தநா ளதன்பின் மூன்றுடுக்களை
இணைத்திடு நடுவில் வலமாய்
இந்திரன் முதலாக எண்டிசை மும்மூன்ருக
எண்ணிடு விவாக சக்கரம்
பரவிபா னிருந்தநட் சத்திரம் முதலாக
பகரும் அன்றுள நாள்வரை
பதியுமிது நடுவாக பரிதிதிக் கதிசெல்வம்
பயில்வன்னி தீதே தரும்
துரவியாந் தக்ஷணந் தனநாசம் நிருதியில்
துயரிலா வாழ்வு கண்டாய்!
சொல்லுவரு ணன்பாகம் அவமாகும் என்பரே
துரிதவா யுவில் ரோகமே
மருவுமுத் திரமழகு மாபாக்ய மீசானம்
மன்னு மித்தர் மத்தினல்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (22)

## விவாக விதி விலக்கு

காலமாம் ஓரையிற் கதிருறவித வையாங்
கலைமதி யேல்ஸ்திரீ மரணமாங்
கந்தன்வந் திடிலிருவர் தோஷமென் றேயுரை
கணக்கனதி சௌபாக் கியம்
சிலமாமிரு குருவில் ஒருவருற சதிபதிகள்
செய்தவப் பேரு பெறுவார்
தீமனுற வைதவ்யம் அலதுதா ரித்திரியஞ்
சேர்த்திடும் அரவு சிகியேல்
பாலர்தோ ஷம்அல்லால் பதிசதிக் குறுமிடை
பண்பிலாக் கேமு த்திரம்
பகர்தனந் தொழிலைந்திற் றுணைசுகந் தன்னிலும்
பன்னொன் றில்மதி கூடவும்
மால்தரும் உயர்வான சுதர்பெரும் பாக்கியம்
மன்னி டுந்தர் மத்திலே
மகிள்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 23

## விவாக விதி விலக்கு

ஆகாது எழினி லழகுசுபர் ஆனுலும்
அந்தணன் சுங்க னுந்தான்
அவர்கோண கேந்திரந் தனலாபம் மிகநன்று
ஆதவன் சேய் மந்தனும்
பாகான அரவுகள் மூன்றுறுபன் னொன்றில்
பண்பா யிருக்க லாகும்
பகறெட்டு தனலாபம் பூசுதன் சனிநிற்க
பதிதோ ஷந்தம் பதிகளின்
வாகான நட்சத்ரம் ராசிக்கே பதனமாய்
வரலா காதே முகூர்த்தம்
வளமான கேந்திரங் கோண மூலம்உச்ச
வளவினிற் சுபர்கள் நின்றால்
வாகுமிகு சுதரோடு அதிகசௌ பாக்கியம்
வழங்கி டுந்தர் மத்திஞல்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்கள கரிவர தனே! 24

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### விவாக விதி விலக்கு

நல்லபொன் ஓறையிற் சுடரிணங் துணேசேயும்
நவிலுபன் ஞென்றிற் சனி
நங்கையன் நாலினிற் றங்கவுஞ் சந்தான
நற்பாக் யமுண் டாகுமாம்
வில்லுடையன் ஓரையில் வக்கிரன்பன் ஞென்றில்
விளங்குரவி தொழில் மேவவும்
வெற்றிதரும் உமைகங்ர யோகமாமி இதுபாரில்
விண்ணவர்போல் வாழ்வர் கண்டாய்!
சொல்லுபூ மன்றுனே இரவியார் கவிபாக்கியம்
சுரர்குரு மால் ஓரைதன்னிற்
சூழ்ந்திடில் மாவிஷ்ணு யோகமா மென்றனர்
சுருதி யாய்ந்துள வல்லவர்
வல்லதிரு பாலருண் டாகுமாம அதிகசுகம்
வழங்கு தனபாக்ய தருமம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளேநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 25

### கர்ப்பாதானம்

இருதுவான ஐந்துநாள் அதன்பின் இரட்டையில்
இசைபோ கஞ்சோட சத்துள்
இரவிசேய் சனிவாரம் அமாவாசை பூரணே
இருத்தை அட்டமி திதிகளும்
உருஜென் மவாரநட் சத்ரம் பரணிபரி
உணர் பாம்புமுப் பூரமும்
உயர்நடு நாள்சோதி விசாகமக மிவைகளே
ஒதிக்கி வையுத்த மந்தான்
பொருதுமுழு நட்சத்ரம் பூருவஞ் சுபதிதிகள்
புகல் கேந்திரஞ் சந்திரன்
புனிதகுரு சுக்கிரன் கோணமாய் மதமறம்
புந்தியுறப் பாவர் எல்லாம்
மருவுதிரி பன்ஞென்று ஆறிலுற சரலக்கணம்
வைசுத்தம் தர்மத் தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளேநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 26

## பும்ஸ வனம்.

ஆதியிற் கெற்பமாய் மூன்றுமா தந்தண்ணில்
அழகு பூருவ பக்ஷமும்
அந்தணன் மதிபுந்தி அசுரர்குரு வாரமும்
ஆகுமாம் நண்டு கன்னி
நீதியிலா வீணையது தள்ளுமற் றதுவாகும்
நவமி அட்டமி சவுத்தி
நிலையிலாச் சதுரத் தகிநீக்கி மற்றதிதி
நிர்ணயஞ் செய்து வைப்பாய்
சோதியாய்ச் சுபர்பார்வை யுளலக்னம் ஆகுமது
சுத்தம் வையட் டமத்தை
சுருதியில் ஆய்ந்துநல சூட்சுமங் கண்டது
கொகுசான பும்ஸ வனமே
மாதுதிரு மங்கம்மாள் நினைவாகக் கட்டிய
மருத்துவ சாலை தன்னை
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (27)

## சீமந்தம்.

நாலாறு எட்டெனும் இரட்டித்த மதிகளில்
நல்ல முன்பக்ஷந் தனில்
நலமான குருபுந்தி புகர்திங்கள் வாரமாம்
நவமி இருள்ஒளி தள்ளியே
சேலாறு ரோகணி மிருகசிர மூன்றுத்ரம்
சேரத்தம் பூசந் தன்னில்
சிங்கந் தேள்அல்லது மற்றராசிகள் தன்னில்
சிலாக்கிய பொன் நோக்கமாக
பாலாறு போலஆ காயம்நிர் மலமாக
பாக்கியமுள ஏறு பொழுதில்
பதியஅட் டமசுத்த மானலக் கினமதை
பார்த்துவை சீ மந்தமே!
மாலான பி. எஸ். ஜி. தர்மமெனக் கூட்டிய
மணமான பள்ளி தனையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (28)

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### ஜாதக கர்மம்

ஜெனித்த முதல்ஏகா தகந்தன்னில் அதன்மேலே
திங்கள் பொன்புந்தி சுங்கன்
திவ்யரோ கணிகுதிரை புனர்தம்பூ சம்மத்தஞ்
சிராவணம் அவிட்டஞ் செக்கு
இனித்தஉத் ரத்திரயம் உயர்பர்வந் த்வயந்தவிற
இயல்பான சுபதிதி களும்
இடபமிது னங்கடகம் கன்னிகோல் சிலைமீனம்
எழில் சுபார்கள்விழி நோக்கமும்
இணைத்தபொன் புதன்சுங்கன் இருக்கின்ற ராசியும்
இது யெட்டுஞ் சுத்தமாக
இன்நாளில் ஜாதகர்க் கினியபுண்யா வசனம்
இதமாகச் செய்ய லாகும்
மனைத்தலந் தனிலதிக தர்மங்கள் செய்திட
மனம் வந்துகந் ததற்கு
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (29)

### நாமகரணம்

தூயதிட ஜாதகன் உத்திட்ட முதலாக
துலங்கு பனிரெண்டு நாளும்
துடராக மூன்ருறு எட்டுமதி ஆண்டினிற்
சுந்தரச் சுபர் வாரமும்
நேயமுன் பக்ஷமுந் திரிதியை பஞ்சமி
நேர் சப்தம் ஏகாதசம்
நீடுதிரி யோதசி திதியாகு மசுவினி
நிகரான ரோக ணியுமே
ஏயபுனர் தம்பூச மிருகசிரம் அத்தமும்
எழில் உத்திரத் திரயமே
இதமான சோதிசி ராவணம் அவிட்டமும்
இயல்சதயம் ரெவதி தனில்
மாயகவி சேப்புதன் ஏழெட்டு ஒன்பதில்
மன்னு பி. எஸ். ஜி. தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (30)

## சௌளம்

பத்தியாய் ஒன்றுமூன் றைந்துவரு டங்களில்
பண்பான உத்ர அயனம்
பதியசுக் கிலபக்ஷம் பூர்வான்ன காலத்தில்
பகரு மதிகுரு புந்தியில்
சித் தியாங் குருசுங்கன் பிரகாச மாகவும்
திகழ்லக்ன அமிசை பெலபாய்
திரிதிபஞ் சமிசப்த தசமியே காதசி
திரியோ தசித் திதிகளில்
உத்தியாம் அசுவினி மிருகசிரம் புனர்தமும்
உரோ கணிபூச விட்டம்
ஒளிரத்தஞ் சிராவணம் ரேவதிகற் கடகமும்
ஓங்குயாழ் கன்னி மகரம்
மத்தியில் நிறைகுடம் மீனில்ஏழெட் டொன்பான்
மாசுத்த சௌள லக்னம்
மசிழ்வான பி. எஸ். ஜி. தர்மமேல் அன்பான
மங்களக் கரிவர தனே! (31)

## வித்தை ஆரம்பம்

விரிபுவன மீதினில் வித்தையா ரம்பமது
விளம்பு மைந்தாண் டதனிலே
விசேஷ முத்திரஅயனம் பூருவந் தனிலே
விளங்கு சுபர்வார மதனில்
அரியதிரி யோதசி துவாதசிப் பிரதமை
அட்டமி யுவா யிருத்தை
அல்லது மற்றதிதி ஆகுமாம் ஆதிரை
அத்தமுஞ் சோதி குதிரை
தெரியனுஷ மவிட்டமுஞ் சதையந்தேர் பூசமுந்
திரியுத்திரந் தோணி புனர்தம்
திங்கள்புதன் மரையாமல் தேவர்கோன் விழிகாண
திகழு மொழி சுத்தமாக
மருளிலாப் பலசுபர்கள் கேந்த்ரகோணம் ஆக
மன்னு வித்யா ரம்பமே
மகிழ்வான் பி. எஸ். ஜி. தர்மமேல் அன்பான
மங்களக் கரிவர தனே! (32)

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### நாட்டினிற் பிறந்தார் பேரு

மாந்தராய் வந்திடில் மண்மீதில் அன்பான
மகிமைபேர் விளங்க வேண்டும்
மற்றுமெஞ் ஞானியென யரவருமு ரைக்கவே
மனமதிற் பொருமை வேண்டும்
சேர்ந்தினிய ரணசூர வீரனிவன் என்னவே
திக்கெட் டும்புகழ வேண்டும்
திடமாகப் பல்கலைகள் ஆராய்ந்து செய்நூலை
சேர்த்தச்சு இடவே ண்டுமே
சோர்ந்துவரு வோர்க்குதவி ஆகிநிலை நிற்கவே
செய்து கலைகூட முந்தான்
சொற்பெரிய பிரசவ விடுதியுங் கல்யாண
தூயமணி மண்ட பந்தான்
வாழ்ந்துவரு வோருக்கு உதவிசெய் பி. எஸ். ஜி.
வண்மையுள தர்மத் தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (33)

### கிரகங்கள் நின்ற தர்ம நிலை

தந்தைதாய் சொற்கேளார் தடுத்துக் கெடுப்பவர்
தகைவிலா எட்டிற் சனி
சபையிற்செய் பிரசங்கந் தனிற்பழு துரைப்போர்கள்
தனைமிஞ்சிப் பேசும் பெண்டீர்
நிந்தையாய்ப் பகைகொள்வா ரிவர்மூவர் க்ஷேமத்தில்
நின்றிட்ட சேயொ க்குமே
நேரில்தன் னேடெதிரில் பேசிடும் அடிமையே
நிசியட் டமத்திற் சசி
பந்தமில் லாமலே பங்குக்காய்ச் சபையேற்றி
பகர்தம்பி ஜென்ம ரவியாம்
பண்பிலா வஞ்சனை தம்பிக்குச்செய் தமையன்
பதினென்றி லரவா குமாம்
வந்துமகிழ் பி. எஸ். ஜி. பாக்கியந் தன்னிலே
வளர்கின்ற தர்ம குருவாம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (34)

## இதனுல் இது வசியம்

புவனமிசை கல்வியே ஜனவசிய மாம்பக்தி
புனைவதே தெய்வ வசியம்
புகழுமரி யாதையே வித்வஜென வசியமாம்
புகல்பந்து வசியஞ் செல்வம்
கவனமுடன் சபையிலெப் போதும்வி டாதுதான்
காப்பதே ராஜ வசியம்
கருணையிலா விலைமாதர் வசியமது பணமாகும்
கள்ளர் வசமிது போலவே
தவமுடையர் வசியமது தொண்டுபுரி வதுமாகும்
தண்டனை துட்டர் வசியம்
தங்குவோர் வசியம்இத மானமொழி சத்திரந்
தனிலுள்ள காவ லர்க்கு
மவமிலாப் பி. எஸ். ஜி. தர்மஸ்தா பனங்களில்
மன்னர் முதல் வசியமாகும்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (35)

## பதரெனப் படுவர்

தந்தைதாய் துயருடன் வாழ்ந்திட இன்பமாய்த்
தான்வா ழும்மைந் தன்பதர்
தக்கபரி வாரத் துடன்சென்று சமரினில்
தங்கிடா தொழிவோன் பதர்
முந்துபெரி யோர்புத்தி சற்றேனுங் கேளாமல்
முனைகொண்டு நிற்போன் பதர்
முதலிருந் தாசையாய் இரக்கின்ற லோபனே
முறையிலா னிவனும்பதர்
சிந்தையுள மனைவியை விட்டுவேசி யர்கள்பால்
சென்றுகளி கூர்வோன் பதர்
செய்யநற் றேழரைக் காணுமல் புரளிபல
செப்புவிசு வாசன் பதர்
வந்தனையாம் பி. எஸ். ஜி. தர்மநிலை யங்களை
வகுத்த வர்பத ரல்லவே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (36)

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### ஒருபக்ஷம்

நெறிதவறி முகம்பார்த்து ஒருபக்ஷஞ் சொல்லுவோர்
நிலையிலா திவன்ம னையினில்
நின்றிடும் வேதாளம் முளைத்திடும் வெள்ளெருகு
நீள்கிளி மூலி படரும்
பெரிதுவுள இவன்கிளைகள் மாசியிலை போலுகும்
பின்னுமெழு பிறப்பி லுந்தான்
பிள்ளையிலா துழலுவான் இவன்முகந் தனைவிட்டு
பிரியாளே மூதே வியும்
சரியில்லை யிவன்பாரம் அதிகமென் றெண்ணியே
தயங்கு வாள்பூ தேவியும்
சண்டாளன் இவனென்று தள்ளுவான் எமனுந்
தகுமான கீழ்நர கினில்
வருமான புவியினில் நடுவுரைப் பாரெலாம்
வழங்கு மித்தர் மத்திலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (37)

### இவ்வினத்தோர் விலங்கெனலாம்

ஒருவர்சொற் கேளாமற் றன்செயற் சரியென்று
உறுதிசெய் வோன் மற்கடம்
உயர்சபையிற் குறிப்பரிய முடியாமல் நிற்பவன்
ஒளிவிலா மரமா குமாம்
வறுமையுள எளியோரை எதிர்செய்து நிற்குமொரு
வம்பனே ஞமலி யாவான்
வருவிருந்த தைநோக்கிச் சீறிடும் லோபனே
வண்மை யிலாப்புலி யாகுமாம்
மெருமையுள பெரியோர்கள் சபையிற் படுத்திடும்
பித்தனே சண்டிக் கடா
பிணக்கிலா தடுத்தோருக் கிடுக்கணே செய்திடும்
பெரும்பாவி கொட்டு தேளாம்
மருமமுள பெரியோரை கவிதையுணர்ந் தன்பாக
வழங்கு கொடையே தர்மமாம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னினுறை
மங்களக் கரிவர தனே! (38)

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### ஒன்றை யொன்று பற்றி நிற்பது

வாய்மைதவ ராதுள்ள மாந்தரிடந் திருமகள்
வந்து குடிகொண் டிருக்கும்
வல்லதிரு மாதுள் ளிடந்தனில் மேலோங்கி
வளரு தனபாக்ய முண்டு
தூய்மைமிகு பாக்கிய மிருக்கின்ற யிடத்திலே
துளசிமால் கலையு முண்டு
துகளில்மா லொளியுள் ளிடந்தனிலே நல்ல
துலங்குத யைதானு முண்டு
நேய்மையொளிர் தயையுளோ ரிடந்தனிலே குணம்
நிகர்தர்ம மிகவு முண்டு
நிலைதர்ம முள்ளவ ரிடந்தன்னி லேசத்ரு
நிற்க மாட்டா னெதிரிலே
மாயவுல கத்திடை பி. எஸ். ஜி. குடும்பத்தில்
மனம்வந்து செய்த தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! (39)

### தீயராற் பயன் படாதவை.

நீள்மடுவிற் றாமரை மலருண்டு அதையொருவர்
நெறுங்காது முதலை யுண்டு
நெகிழ்தாழம் பூவுண்டு அதையொரு வரணுகாமல்
நெறுக்கமாய் முள்ளு முண்டு
கேள்வரையிற் றேனுண்டு கிடையாத வண்ணமாய்
கிருபை யிலாஈயு முண்டு
கிளருசந் தனவிருட் சமுமுண்டு யொருவர்க்கு
கிட்டாது அரவ முண்டு
வாழ்மனையில் செல்வமுண் பதையொருவ ரணுகாது
வல்லமை யாய்நாய் களுண்டு
வைகுண்டம் உண்டதை அணுகாமல் நரருக்கு
வம்பான பாவ முண்டு
வாழ்வோடு கொடுக்குந் தியாகியுண் டங்கொரு
வழக்குள்ள கோள னுண்டு
மகிழ்கொண்ட ஸ்தாபனம் உயர்வாகு மெந்நாளும்
மங்களக் கரிவர தனே! 40

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### இது இதற்கிணை யாமோ வெனல்.

பூங்காவ னந்தன்னி லுதிப்பினுங் காகமது
புதுமை புகல்குயி லாகுமோ
புகழ்குடியிற் பிறந்தாலும் அசடர்தா னெப்போது
புனித பெரியோ ராவரோ
பாங்கான வாவியிற் பூத்தாலுங் கொட்டியது
பங்கஜ மலரா குமோ
பகர்கானந் தன்னிற் பிறந்தாலும் முயலது
பட்டத்து யானை யாமோ
நீங்காத வாருதியிற் பிறந்தாலுஞ் சங்கது
நேரா னமுத் தாகுமோ
நீடுகடல் தன்னிற் பிறந்தாலு முப்பது
நிகர்சீனி தானகு மோ
மாங்காயின் சுவைபோல பி.எஸ்.ஜி. தர்மங்கள்
மகத்தான கோவை நகரில்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 41

### அமுதம்.

தேவருக கமுதமது ஸ்வர்க்கத் திலாவுக்கு
திகமு முலைக்காம் பிலமுது
திருந்துபண்டி தர்க்கமுது கையிலங் தணருக்கு
திருமந் திரந் தன்னிலமுது
பாவலர்க் கமுதமது மொழியிலே விதரணிகர்
பங்கில முதங் கண்ணிலே
பத்தருக் கமுதுசத் கதைகேட்ட செவியிலே
பங்கமி லார்க்கமுது நெஞ்சில்
பாவையர்க் கமுதமதி கிரணமென வேயுயர்வு
பற்றிடும் அங்க மெல்லாம்
பரிவுடைய பெரியோர்க் கமுதமது குணந்தனில்
பண்பாக விளங்கு மன்றே!
மாவலுடன் செய்திட்ட பி. எஸ். ஜி. தர்மத்தில்
மகத்தான அமுத முண்டு
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 42

இன்னவருக் கின்ன சிந்தையெனல்.

முத்திநெறி யறிவோர்க்கு மோட்சத்திலே சிந்தை
மூதறி வுளோர் தமக்கு
முறையான தருமத்திலே சிந்தை வேந்தர்க்கு
மொழியன்ய ராஜ்ய சிந்தை
நத்துகா முகர்க்கன்ய மாதர்மே லேசிந்தை
நலமிலாத் திருட ருக்கு
நாளெல்லாங் களவிலே சிந்தை காராளர்க்கு
நல்ல வேளாண் மைசிந்தை
சித்தியாம் வணிகருக் காதாயம் லோபிக்கு
திடசிந்தை யில்லை எனலாம்
செயலிலா வறியர்க்கு பொருளிலே சிந்தையாம்
திறமாகக் கற்ப வர்க்கு
மத்துகல்வி யிற்சிந்தை பி.எஸ்.ஜி. குடும்பத்தில்
மனுதர்ம சிந்தை யாமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 43

கற்புடைய பெண்டீர்

பத்தாவுக் கேற்றபூ ஜாதிரவி யங்கொண்டு
பக்தியொடு தந்து குருவாய்
பாகமொடு அடிசில்பல செய்துவூட் டும்போது
பரிவான தாய் போலவும்
எத்தாத யோசனையி லிதுவென்று யுக்திசொல
இதமான மந்த்ரி போலும்
இரதிகேளி செயசப்ர மஞ்சமதில் இதமாகி
இன்சொலுள வேசி போலும்
சத்தாகி லும்பதி பொறுப்பிலாச் சிறினும்
தாங்கி பூதேவி போலும்
தலசேவை நதிமூழ்கல் பலதெய்வ விரதமும்
தங்கள் பதசேவை யென்று
வத்தாதி ருப்பவள் கற்புநிலை பெண்டீராம்
வல்ல யித்தர்ம த்திலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 44

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன் ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### தீப் பெண்டீர்.

நீதியன் பர்க்கமுது வையென்று சொன்னாலே
நீயுமொ ருஆண் பிள்ளைபோல்
நினைவெங்கே சட்டிபா னையுமெங்கே என்பளே
நிலையா கச்சே கரித்தால்
வாதியாதே தலைநோகு தென்பாள் சமையல்
வைக்கே னெனப் படுப்பாள்
வம்பிநீ என்றுமே பேசினால் உனக்குற்ற
வகை சொல்லுவேன் என்பளே
கோதியீர் பார்த்துப் பேனெடுத்துச் சொன்னாலுமே
கூடாது என்னால் என்பாள்
குப்பென்றால் நஞ்சுண்டு பழிபோடு வேனெனக்
கூகூ வென்றழுது நிற்பாள்
மாதுதிரு மங்கம்மாள் மருத்துவ சாலைக்கு
வந்து சமையல் செய்வாளே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 45

### அன்னிய நாட்டில் உயர்வு.

திருமகள் ஒளியுள்ள மாணிக்கமாங் கெம்பு
திகழு வஜ்ஜிர ரத்தினம்
சிழ்சிப்பி தனில்வுள்ள உயர்வான தாளமும்
தேசிபெறு பவளமுந் தான்
உருவளர் புட்பரா கம்நீலம் வைடூரியம்
ஒளிர் பச்சை கோமேதகம்
உயர்கலைக ளாய்ந்துதிரி காலங்களைச் சொலும்
உயர்வான ஜோதி டர்க்கும்
நெறிவளர் புடமிட்டு பஸ்பங்கள் லேகியம்
நேரான ஔஷ தங்கள்
நிலைகொண்ட தேககுணம் தாதுநிலை கண்டுயிர்
நீங்கா துசெய் வைத்தியன்
மருமமுள புலவர்க்கும் பிரசங்கி யிவர்க்கெலாம்
மதிப்பில்லை உள் ளூரிலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 46

## திருந்தினுந் திருந்தாதவை.

பூவினிற் றேன்விட்டு வளர்த்தாலுங் காஞ்சிரம்
புனிதமாய்க் கைப்பு விடுமோ
போகிக்குட் டிக்கமுது தந்துவளர்த் தாலும்
புன்மையுள விட மாறுமோ
பாவிக்க ழுதையைக் கட்டியோ மஞ்செய்ய
பரிவான குதிரை யாமோ
பகருநாய் வாலைநி மிர்த்துவைத் துக்கட்டில்
பண்பாக நேரா குமோ
மேவுகற் பூரங்கஸ் தூரிபல கூட்டினும்
மிகுவுள்ளி குணம் மாறுமோ
மிளிருமை மிகயிட்டு நோக்கினும் பொட்டையது
மேன்மையுள கண்ணு குமோ
மாவுடைய வேந்தரும் பி. எஸ். ஜி. தர்மமெனில்
மனமாகித் திரும்பு வாரே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 47

## லோபியர் குணம் மாராது.

வெம்புலி சிங்கங் கரடிபாம் பிவைகளை
வெகுநேச முண் டாக்கலாம்
மிகவெகாடிய நோய்களை மருந்துண்டு சுகமாக
மேன்மைப் படுத்தி விடலாம்
தும்புசெய் பிர்மராட் சஸப்பூதப் பேய்களை
துலங்கக் கூத்தாட் டலாகும்
தூயபுட் கிள்ளைக்குத் தெளிவான வார்த்தையைச்
சொல்லிப் புகட்ட லாகும்
வெம்புமக் கினியைச் சுடாமற் குளிரவே
வைக்கலாம் வேறொரு வரறியாமலே
வெளியினில் உலாவலாம் விண்ணவரை ஏவலாய்
மேவியாட் கொள்ள லாகும்
வம்புடைய லோபியை ஈந்திடச் செய்வது
மன்னவர் கள்தர்ம மாமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 48

## சகோதிர ஒற்றுமை.

தம்பிக்குத் தன்பட்டந் தந்தும கிழ்ந்திடும்
தமையனுர் அன்று உண்டு
தன்றமை யன்வருமளவு மாவிரத மாகவே
தவசுநிலை கொண்ட நம்பி
நம்பிக்கை யாகவும் பெற்றதாய் போலவே
நன்மை செய்திடும் அண்ணியும்
நவிலுமுன் பிதாவென வடிகளைப் பணிந்திடும்
நற்றம்பி குணமு ளானே
வெம்புக்கை யில்லாது தினமகிழ்ந் தடிபணியும்
வளமுடைய கொழுந் தனும்
வாஞ்சையாய்ச் சேர்ந்து வாழ்ந்திட்டார்கள் பூவினில்
மன்னு தசரதன் சுதர்களே
மன்புக்காய் பி. எஸ். ஜி. சோதர்கள் இதுபோல
மணமாக வாழ்ந்தார் களே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 49

## வறுமையிற் செம்மை.

தாங்கொணு வறுமையிற் சபைதனிற் செல்லவே
தான்கூசும் மனது நொந்து
தான்பெற்ற பிள்ளைமனை சென்றுலு மதியார்கள்
தையலும் ஏசு வாளே
ஓங்குமட மறிவதுகுன்று முயர்வில்லை விருந்தில்லை
உத்தமனு யிருந் தாலுமே
உண்மையை உரைக்கினும் பொல்லாத வசனமாய்
உற்றிடும் பொய் என்பரே
பாங்கான நேசர்கள் பகைகொண்டு முதலெலாம்
பறிக்க வேயெத் தனிப்பார்
பலவிதமாய்த் தொலையாத விசாரமே யல்லாது
பரிவில்லை சிந்தை தனிலே
வாங்கிது வீரமுள பி. எஸ். ஜி. தர்மங்கள்
மங்காது செய்வர் கண்டாய்
மகிழ்கொண்டு அருள்செயத பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 50

## பிரதமருது வார பலன்.

ஞாயிறுக் கதிரோகி யாகுமாந் திங்களில்
நல்லகற் புடைய ளாகும்
நலமிலாச் சேய்வாரம் விதவையாம் புந்தியில்
நாகரிக புத்ரர் உண்டாம்
தூயகுரு வாரத்தில் அதிகசுக பாக்கியந்
துன்னு சுதர்பெற் றெடுப்பார்
சுக்ர வாரந்தன்னி லதிபோகவதி யாகி
சுசியுடையாள் லக்ஷ்மி போலும்
ஏயசனி வாரத்தில் எழிங்குன்றும் தரித்திரம்
இதமிலா மொழிபுக லுவாள்
இங்கிதசு கந்தமதை கொங்கையணி மடவார்கள்
இருதுவாகும் வார பலனே
மாயமிலாத் தொழிற்கல்வி தர்மத்தை நிலைசெய்த
மகதீரன் ஞாப கத்தை
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 51

## கணிகைய ரியல்பு.

தட்சணக் கொச்சிவளர் மஞ்சளும் வங்காளந்
தனிலுள்ள பச்சை யோடு
தவனங் கதிர்ப்பச்சை ஏலங் குலாம்பூவும்
தாளிசப் பத்ரி கூட்டி
சடாமஞ்சில் சந்தனத்தூள் கிச்சிலிக் கிழங்கு
தகுமான மகிழம் பூவும்
தான்கூட்டி நலங்கு மஞ்சனமாட்டி காஷ்மீர
சல்லா விலே துவட்டி
இட்சையுள கோவைமரு தாசலஞ் செட்டிகடை
இனியபட் டுடை தன்னிலே
எழில்பெருக ப்ளூரஸ் இலகுரோஸ் புடைவையை
இதமா கவேயு டுத்தி
எற்றமுள சேலத்தில் கோபால பத்மமாய்
இலகுபெயர் பெற்ற விலாசம்
இயலுமதி திடமான புடாநிறை ரவுக்கையை
இணைதனத் திருக்கி வைத்து

பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

பட்சமுள பெரியகடை வீதியிற் சொர்மைய
பளிங்கு மாளிகை தன்னிலே
பதியும் பி. ஏ. ராஜூ சிரேஷ்டியார் துணைவர்தரு
பண்பான வஜ்ர நகைகள்
பகர்சொல்லை மறவாத மீனாட்சி எங்ரேவர்
பற்றிசெய் யொட் யாணமும்
பாங்கான ஆர். வி. ஏ. நடராஜ னரகஜா
பார்வைதர பொட்டு மிட்டு
மச்சரேகை எம். கே. யசோக பொட் டணந்தன்னை
மணமாக வாயில் இட்டு
மன்னவர்கள் மெச்சப்புன் நகைசெய்யில் விதமான
மங்கைநற் கணிகை யெனலாம்
மானிலந் தன்னில் பி. எஸ். ஜி. யின் தர்மங்கள்
மகதீரர் செய்த தாலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 52

என்றுங் கண்டிக் காதவர்.

பண்புரைத் திடுதூதர் பரிவான தாய்தந்தை
பகர்தானங் கொடுப் போர்களும்
பைந்தமிட் கவிராஜர் ஆசிரியர் வீரர்
பதிபுரா ணிகர்பு ரோகிதர்
நண்புற்று வேதாகமங் கற்றவை தீகர்
நலமான தவசி ரேஷ்டர்
நற்போகந் தந்தவர் விகடப்ர சங்கிகள்
நலிவந்த பிணி யாளரும்
திண்பற்ற வறுமையோர் திருவுடைய தன்குரு
சிறுவ ரொடுதனை நம்பினோர்
செயவிலா திவரெலாம் ஒருபோதும் அறியாமல்
செய்யாது செய்தா லுமே
மன்பற்று வாதாடி அவர்களைத் தண்டித்தல்
மன்னர் நெறி அன்றுகண்டாய்
மகிழ்வான பி. எஸ். ஜி. தர்மமேல் அன்பான
மங்களக் கரிவர தனே! 53

## சமயத்திற்கு தவுவது.

பதினேழிற் பெற்றசேய் பகர்கன்னி மாதத்தில்
பதினைந்தில் நட்ட சம்பா
பண்புறும் ஆடியில் அத்திவால் போலவே
பற்றிவரு கன்னற் பயிரும்
இதமுநா ணயமுளரின் கையினில் இதமாக
இட்டு வைத்திட்ட பொருளும்
இடுக்கண்வரு மென்றுமுன் னுறுதியாய்க் கற்றிட்ட
இணையிலாக் கணித நூலும்
நிதிபெருக வேந்தரைச் சேவிக்கும் நேசமும்
நிலையு ளார்க் குபகாரமும்
நேரில்வீ ணல்லவே யிவையெலாம் பலனோடு
நின்றிடும் உதவி யாக
மதியூக மாய்ப்பூளை நகரிலனு கூலமாய்
மருத்துவ சாலை தனையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 54

## சமயத்திற் குதவாதது.

மனத்திலில் லாதெழுதி வைத்திட்ட வித்தையும்
மருவலர்கள் வைத்த நலமும்
மணமக ளிருக்கவேர் மனையாளைச் சதமென்ன
மசிழுநற் குடிவாழ் கையும்
தனத்தை அன்னியர்க்கீய்ந்து தனக்கில்லை என்னவே
சஞ்சலப் படு வோர்களும்
தயவிலாச் சோதரன் அன்னியநாட் டிலேகியே
சஞ்சரித் திரு பிள்ளையும்
மனத்திலொரு எண்ணமும் வாய்ச்சொல் வேருகவே
வழங்கு வஞ்சகர் நேசமும்
வசையுறுவ தல்லாது உண்டென்பர் சமயமது
வந்தபோ துதவாது காண்
மனைத்தலமேல் முன்னின் றுதவிடும் பி. எஸ். ஜி.
மகராஜர் செய் தருமமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 55

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### முகடிவாசம்.

விபசாரமங் கையர்பால் நிசமிலார் வாயினில்
விருந்தான பெண்கள் நிழலில்
வினையான சூளைசுடு விபரீத புகையினில்
விக்கினக் கோளர் இடமும்
சபம்வேகும் புகையினிற் சரிபாதி இரவினில்
சண்டாளர் நிழல் தன்னிலே
தயையிலார் முகமதினிற் றணலிரப் புகையினில்
தளிர்தீப நிழல் தன்னிலே
உபகார காமுகரில் உணவிலா தார்முகம்
உக்கிர முள்ளோர் சபையினில்
உலையிலா அடுப்பினில் உழுகூடா நிழலினில்
உண்டு சீர்கேடி என்பார்
வபசார மூதேவி வரமாட்டாள் இவர்களிடம்
மன்னுமி இத்தர் மத்தினல்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 56

### வேட்டகத் திகழ்ச்சி.

மணந்திடும் மனைதன்னில் மருகன்வந் திடில்நல்ல
மங்கள மாயுப சரித்து
மாமிமுதல் யாவரும் விருந்துநெய் பால்தயிர்
மகிமை யொடுபல பதார்த்தம்
குணந்தரும் வர்க்கவகை தந்திடுவார் தைலத்தில்
குளிரமுழுக் காட்டி வைப்பார்
குறைவிலாத் தின்பண்டம் பாக்கிலைதந் திடுவார்
கூறுமதி நாளா கிலோ
க்ஷணம்படி இறங்குவது போலவே மரியாதை
தான்குறையும் நாளுக்கு நாள்
தகுமைத் துனர்கேலி செய்குவார் மாமியார்
தன்மனையில் ஜோலி யிலையோ
மனைவியொரு துரும்பாய் மதிப்பளே மட்டியென
மன்னுதன் அகமே சுகம்
மகிழ்வான பி. எஸ். ஜி. தர்மமேல் அன்பான
மங்களக் கரிவர தனே! 57

## இருந்தும் இல்லாதவர்.

தீராத பிணியாளர் மாறுதசின முளோர்
தீங்கான கோள் உரைப்போர்
திருவிலா லோபியர் தினம்இரந் துண்போரும்
தெரிந்து வஞ்சகஞ் செய்குவோர்
சிரானமனைவியை வழங்கிஜீ வனஞ் செய்வோர்
சிறப்பான வேட் டகத்தில்
சென்றுண்டு வாழ்வோ ரும்மனைக் கஞ்சி
செய்விருந் தொழித்து விட்டோர்
வீரான சபையினில் நிந்தைபட் டுழல்வோரும்
விசாரத்தில் அழுந்தி னேரும்
வினையான நாட்டமுளோ ரிருந்தும் இலார்போலே
வீணான ஜென்மம் ஆமே!
மாராத தர்மத்தை மண்மீதில் நிலைசெய்த
மதுரமுள பி. எஸ். ஜி. யின்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 58

## எப்போதும் இருப்பவர்.

உலகினில் அழியாத வாவிகூ வந்தன்னை
உண்டாக்கி வைத் திட்டவர்
ஒளிர்தவமுந் தெய்வப்ர திஷ்டைசெய் துதவினோர்
ஒப்பிலாப் புதல்வர் பெற்றோர்
பலகலைக லாய்ந்துநன் நூல்களை ஆக்கினோர்
பண்பான சுத்த வீரர்
பார்தனில் என்நாளும் மாராத தர்மங்கள்
பண்ணி வைத்திட்ட பேர்கள்
நிலைபெறுங் கலைகூடம் உண்டாக்கி வைத்தவர்
நீதிநிலை நிறுத்தி வைத்தோர்
நிர்ணயப் பிரசவ விடுதிகள் அமைத்தவர்
நீங்காத ஞானம் உள்ளோர்
மலரும் பி. எஸ். ஜி. யின் குடும்பத்தார் எல்லோரும்
மறித்தும் இறவா தார்கள்காண்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 59

## இடும்பால் அழிந்தவர்.

இரணியன் வரப்பிர சாதமுந் தோள்வலி
இராவணன் அதி யாயுளும்
இலகுகஞ் சன்வலியும் சூரபத்மன் பலமும்
இணையிலா வாலி திடமும்
முரணுகௌ ரவர்நூற்று ஒருவர்ப ராக்கிரமம்
முனைகொண்ட மது கைடவர்
முழுதுதரு மாபலிதன் ஆண்மையுங் கீசகன்
மகமலர்ச் சியுஞ் சோமுகன்
தரணிதனில் வல்லமை திரிபுரர்கள் எண்ணமும்
தக்கனின் எழில்கள் எல்லாம்
தங்காது அவரவர்கள் இடும்பினால் அழிந்தார்கள்
தயவுமிக வேண்டு மென்று
வருநெறி அறிந்துநல் பி. எஸ். ஜி. மன்னர்கள்
வகுத்தார் கள்தர்மத் தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 60

## இன்னவருக்கிது துரும் பென்னலாம்.

கொடுத்திடுந் தியாகிக்குப் பொருளொடு துரும்பாகும்
கூர்விழியின் பெண் போகமே
குணமான மோட்சசிந் தனையுளோர்க் கென்நாளும்
கூடாது துரும் பாகுமாம்
எடுத்திடும் படிச்செல்வம் வேண்டாத துறவிக்கு
எழில்வேந்த னொரு துரும்பு
எதிராளியை வெல்ல எண்ணுவன் தன்உயிர்
இதுவும் ஒருதுரும் பாகுமாம்
தொடுத்திடுங் கலைமகள் அருளுடையன் ஆனாலே
தூயதமிழ் துரும்பென் னலாம்
தொடுத்து வந்திடுநூலை அச்சுவா கனமேற்றி
தொல்லுலகில் ஈய்வ துந்தான்
மடைத்திறம் போலகொடை கொடுக்கின்ற பி. எஸ். ஜி.
மன்னருக் கிது துரும்பாம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 61

## நல்லினஞ் சேர்தலின் பயன்.

கரைவழி அடுத்திட்ட காகம்பொன் நிறமெனக்
களர் சந்தனத் தருவுடன்
கலந்திட்ட மரமுமல் வாசனையே தந்திடும்
கண்ய முளபா லோடுமே
உறைவழியு நீரெலாம் பாலாகும் என்பரே
ஒளிரத்ன வடத்தி னுள்ளே
உகந்தபடி கம்மணி யதுபோலதின் குணமாம்
உயர்ந்த பெரியோர் இடத்தில்
நிறைவழி அடைந்திடில் அவர்தன்மை போலவே
நின்றிடும் மேன்மை யாக
நெறியாக ஏற்றுஆ தரித்துதவு வார்களே
நேர்மையுள பெரியோர் குணம்
மறைமொழி யின்உறுதியால் பி. எஸ். ஜி. ஸ்தாபனம்
வாஞ்சையால் செய்த தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 62

## நற்புலவர் தீப்புலவர்

கார்மிகுஞ் சோலையில் குயில்சென்று மாங்கனி
கனிவோடு தேடி உண்ணும்
காகமது யெக்கனி இருந்தாலும் வேப்பங்
கனிகண்டு மகிழ்ந் துண்ணுமாம்
பார்வண்டு எவ்வித சுகந்தமுமி இருந்தாலும்
பரிந்துண் ணுமலந் தன்னையே
பண்பான வரிவண்டு பங்கேரு கந்தன்னில்
பாங்கான தேனை யுண்ணும்
ஏர்மிகு பெருந்தகையர் பொருட்சுவை யிதுவென
எண்ணி இனிதென்று கொள்வார்
ஈனவன் கண்ணார்துகள் ஏதுவென்று வுன்னியே
ஏகிதமிழ் ஆய்வர் கண்டாய்
வார்குலந் தன்னில் காங்கல்லார் பி. எஸ். ஜி.
வண்மையுள கங்கா வள்ளல்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவா தனே! 63

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### உயர்வு வந்தால் சுவாமி என்பர்.

திருவந்து சேரிலோ கருப்பன்கருப் பண்ணனும்
திகழ் கருப்பை யனுகும்
செயல்கொண்ட கருப்பண்ண சாமியே என்னவும்
திவ்ய சமுகங்கள் என்பார்
மருமலர் சூடுவார் நல்வரிசை கூறுவார்
மங்களமாய்த் தங்கும் என்பார்
மன்னவா வாருமென வேயெழுந் தன்பாக
மகிழ்ந்தெழுந் தருளு மென்பார்
உருமகிழ்ந் திருநாளில் இவ்விதஞ் செய்குவார்
ஊழ்வினை யால்நொந்து வந்தால்
உயர்வுதாழ் வாகிமுன் கருப்பன் கருப்பனென
உரைப்பார் கள்உலகிற் கண்டாய்
மருளிலாப் புவிமீது பி. எஸ். ஜி. தர்மமே
மன்னுமிது வுயர் வாகவே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 64

### நோய்வராக் கோள்கை.

எண்ணெய் இட்டுச்சனி புதனில்வென் னீரிலே
இதமாக முழுகி வருவார்
இளவெயில் விரும்பார்கள் தனைமூத்த தையலை
இன்பமென் றணையா ர்களே
நண்ணுபனி வெயிற்காற்றில் சதகாலம் நடவார்கள்
நவிலடிகில் வேலை செய்யார்
நற்பகலிற் புணரார்கள் மலஜலம் அடக்காமல்
நன்றாய்க் கழித்து விடுவார்
பன்னுசுக் கிலம்விடார் பழையஆணமு முண்ணார்
பசியா மற்புசி யார்களே
பக்குவநெய் உருக்கிமோர் பெருக்கிநீர் கறுக்கியே
பண்பாக உண்ணும் அவரின்
மண்ணில்பேர் உரைக்கினும் நோய்களது அணுகாது
மகதீரன் குருகு லத்தில்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 65

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### புன்மையோர் செயல்.

பித்துப்பி டித்தமர்க் கடங்கள்ளே யுண்டுமே
பிணகொண்ட மூட்பு தரிலே
பேணியங்கே தாவ தேளது கொட்டிடப்
பிரியசன் மார்க்கம் உளதோ?
கத்திக் குறைக்குமாம் அதுபோல அற்பர்கள்
கனம்என்ப தறியா ர்களே
களரிளமை யுடன்அதி காரமுஞ் சேர்ந்திடில்
கண்ய நிறைபக்தி யேது
சற்றுந்தெரி யாதுமேம் பாடுநற் புத்தியும்
சர்ஜ்ஜனர் இவர் என்றுமே
தானறிந் திடான்ஈகை நேசம்நி தானமும்
சரியாக வாராது காண்!
வத்துந் தருணத்தில் பி. எஸ். ஜி. தர்மங்கள்
மன்னிடும் உதவி யாக
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 66

### இது இல்லாது சிறப்பில்லை.

திங்களில் லாஇரவு திருவுயில் லாதமுகம்
செப்பு சுவையில் லாக்கவி
திகழுசர்ஜ னர்களில் லாதவூர் வரமுதவு
தெய்வம் இல்லாத கோவில்
மங்கையில் லாதமனை மைந்தர்யில் லாச்செல்வம்
மணமும் இல்லாத மலரும்
மன்னரில் லாதநகர் மந்திரியில் லாஅரசு
மாற்றன் இல்லாத வாழ்க்கை
பந்தம்இல்லா உறவு பத்தியில் லாப்பூஜை
பலிதம் இல்லாத மந்தரம்
படிப்புயில் லாமனிதன் பரிசுஇல் லாதகவி
பயனில்லை என்று சொன்ஞர்
மந்த்ரமுள பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன மிலையேல்
மகிழ்வில்லை இன் நகரிலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 67

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### ஆராயாது செய்வோரடையுங் கதி.

ஞாயசபை தன்னிலே நடுவுரைப் போர்களும்
நலமான பண்டி தர்களும்
நலமிலாத் தீவினை யகற்றுபரி காரமுறை
நாடிச் செய்பௌ ரோகிதர்
தூயதிட ஜோதிடஞ் சொல்லுசாஸ் திரிகளும்
துலங்கு செங்கோல் வேந்தரும்
துன்னுபிர பந்தகவி யேற்காத செல்வரும்
துதிசிட ரவர் குருவுமே
நேயமொடு இவரெண்மர் ஆதியுள நூலின்வழி
ஆய்ந்து செய்யாது விடிலோ
நிலையிலா துழன்றுபெரு நரகடைவா ரென்னவே
நீதிநூல் முனிவர் சொன்னார்
வாயில்தனில் பி. எஸ். ஜி. தர்மஸ்தா பனமதை
வகுத்துறுதி செய்தார்கள் காண்!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 68

### உயர்வு உள்ள இடத்தில் தாழ்வும் உண்டு.

பங்கஜம் மலர்கின்ற வாவியு லுங்கூட
பண்பிலாக் கொட்டி மலரும்
பகர்குயிற் கூவும் வனந்தன்னிற் காகங்கள்
பற்றியங் கேயிறை யுமாம்
துங்கமிகு மன்னர்சபை தன்னிலே ஈனமுள
துரைகளும் உறை வார்களே
தூயமாணிக்கங்கள் விற்கின்ற கடையினிற்
துகள்படிக மணியு முண்டு
எங்குபிர சித்தமுள பிரபந்த மதுரகவி
ஏற்றசபை தன்னில் அந்தோ!
இதமிலாப் பழங்காடி தன்னிற் புளித்திடும்
ஈனமொழி புலவ ருண்டு
வங்கநாட் முதலாக எண்ணேழு தேசத்தில்
வாணிபமு மோங்குங் கண்டாய்
மகிழ்வான பி. எஸ். ஜி. தர்மமும் உயர்வாகும்
மங்களக் கரிவர தனே! 69

## கீழ்மக்கள் குணம் மாராது.

கந்தமிகு சந்தன வனந்தனில் இருந்துமணஞ்
சற்றும் அறியார் கிராதர்
களர்தரள மெடுப்பவ ரதன்மாலை அணியார்கள்
கருதி அணிவார் சங்கையே
சிந்தைதெளி தாமரை அடுத்தமண் டூகமது
சேறு தனையே அருந்தும்
சிலமிகுதே மாவின்மே லிருந்துங் காக்கை
திறமிலா வேம்பு நுகரும்
பந்தவகை போலநல் லோர்தமை அடுத்தேதான்
பலநாட் பழகி னாலும்
பாரதூரம் அறியாமல் அற்பகுண மேமிகும்
பகருமி தன்செயல் அறிவேனே
மந்த்ரமிகு பி. எஸ். ஜி. தர்மத்தால் நற்குணம்
வந்துவிடு மென்று ரைக்க
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 70

## பலர்க் குபகாரம்

கோடைபொழி மாரியும் சாந்தசற் குணமுடைய
கோவும் ஊரணியின் நீரும்
குலவியிடு அம்பலந் தனில்தருவின் நீழலும்
கூட்டமுள நற் சந்தையும்
நீடுபல மாந்தர்வரு சந்தியிற் கனியாக
நின்றிட் டமா விருட்சம்
நேராகக் காராளர் செய்தவிப சாயமும்
நிலையான நீர்பந் தலும்
தேடுபல துறைசந்தி திங்கள்ரவி சிரணமும்
திவ்ய மாருத சீதமும்
தியாகமிடு நல்லோர் இடத்திலுறை செல்வமும்
தினம்ப லர்க்குப காரமும்
வாடலிலா பி. எஸ். ஜி. தர்மங்கள் பலரையே
வாழ்விக்கும் இந்தி யாவிலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 71

### விடமுள்ள இடம்

களவுசெய் வோருக்குக் கையிலே விடம்நல்ல
கன்னிக்கு விடங் கண்ணிலே
களருபொய் யாளர்க்கு நாவிலே விடந்துட்ட
கயவர்க்கு விடம் பொருளிலே
உளவுசொல் கோளர்க்கு உதடுதனி லேவிடம்
உயர்மோ கன்விடம் விழியிலே
உரகனுக் குப்பல் அடியிலே விடந்தேட்டு
உற்றவிடங் கொடுக்கி லேயாம்
அளவுசெய் எட்டிமரம் போலுமத் துட்டர்க்கு
அங்கமுழு தும்விட மதாம்
அடுத்துக் கெடுக்கின்ற பேருக்குநெஞ் சில்விடம்
ஆதலால் இவை நீக்கியே
வளமுடைய பி. எஸ். ஜி. தர்மங்கள் பலருக்கு
மங்காது அமுதம் ஆகும்
மகிள்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 72

### வைத்தியர் இயல்பு

தரணியிற் பண்டிதர் செய்யுமுறை நலமான
சாஸ்திரம் உணர்ந்து தெளிவாய்
தாம்வருக என்றபின் சென்றுமெய் நிலைகண்டு
தகுபிணி யினுயர் வறிந்து
கரப்பிடித் தேநாடி முதலான பரிசமும்
கண்டு குளிகை கியாளங்
கலிக்கமெங் லூரமுஞ் சூரணந் தைலங்கள்
களரு லேகிய பஸ்பமும்
நிரணய மாய்நன்மருந் துங்கொடுத் துசிதமாப்
நிகழ்பத் யமெளி தாகவே
நேராக ஆரோக்யஞ் செய்ததிக ஆசையை
நினையா மற்செய் பண்டிதன்
வரமுதவு தேரையர்க் குச்சமம் என்றுரர்கள்
வழங்கு மித்தர்மத் தினுல்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 73

## வர்த்தகர் இயல்பு.

கனமான சரக்கினை நயம்பேசித் துளிலாபங்
காணுமென வாங்க வேண்டும்
கண்டமுத லுக்குஒரு மோசம் வராதபடி
கருத்தாய்ச் செல விடுதலும்
இனமான வர்வந்து சிறிதுகடன் கேட்டாலும்
இல்லையென வேயு ரைத்தும்
ஈதலா லன்னியர் நாணயமு முடையரும்
இருந்திடிற் றந்து மேலாய்
தனமான பற்றுவர விற்றாசு நழுவாமல்
தானெழுதி வைத்த லுந்தான்
தக்கலாபங் கூடிவரும் போது சரக்கினைத்
தந்துமகிழ் கொண்டு வாழ்வார்
மனுவோர்கள் முன்சொன்ன முறையர்கப் பூவினில்
மகதீரன் செய்த தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 74

## புதுக்கணக்குப் போட

புவனமிசை வணிகர்க்குப் புதுக்கணக்கிட வேண்டி
புகலுவே னதிதெளி வதாய்
புனிதசித் திரைமாதத் பூர்வபக்ஷந் தன்னில்
புகர் புந்திபொன் றிங்களில்
தவமதுள திரிதிபஞ் சமிசஷ்டி சப்தமி
தசம்ஏகா துவாதிர யோதசி
தகுரோக ணிக்குதிரை சோதியத் தம்ஓணம்
தகுஉத் திரத் திரயமே
சிவமயமா மாதிரைபுனர் தம்பூசஞ் சதையஞ்
சிங்கமிது னந்துலாம் வில்
செல்வ லாபங்குரு விழிநோக்க வியாபாரஞ்
செய்புதுக் கணக்கு வைத்தால்
மவமில்லை மென்மேலும் ஆதாயம் ஓங்குமே
மன்னு மித்தர் மத்தையே
மகிள்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 75

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### தீயவழி விலக்குக

நெஞ்சிலொன் றைவைத்து வாய்வேறு பேசுவோர்
நேசமே கூடாது காண்!
நிலையாக அன்பிலார் வாசல்வழி போகாது
நின்றலே மிகவும் நன்றாம்
கொஞ்சமெனு மதியிலா மடையரோடு நேசமாய்க்
கூடிமுன் நிற் கொணுது
குவலயந் தனிலற்ப தீதுசெய்யினு மொருவர்
குற்றத்தை யெண் ணுது
கொஞ்சுமொழி மடவரொடு பரிகாசம் ஆகாது
கோள்களு முறைக் கொணுது
கோரமுள அரவோடு பழகாது இருள்வழி
கூகா மற்போ கொணுது
வஞ்சமுள தீயவழி விலகிடும் பி. எஸ். ஜி,
வழங்கிடுந் தர்மங் களால்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 76

### உலுத்தர் செயல்

தனங்காக்கும் பூதம்போல் பணந்தேடி யுண்ணுமல்
தாவிப் புதைத்து வைப்பார்
தாராளமா யாடை கூட்டார்கள் நல்லமுது
தான்செய்து வுண்ண மாட்டார்
இனம்குலம் அறியார்கள் இவ்வளவும் இடமாட்டார்
இன்சொல்லுங் கண்டறி யாறே
இலகுபுல வரைக்கண்டு ஓடிப்பதுங் குவார்
இனிதான தர்மம் ஈயார்
கனங்குறைய வாட்டிடுங் காவலர்க்குத் தண்டம்
கள்ளர்க்கும் ஒதுக்கி வைப்பார்
களருபுத்திரர் தின்னச் சினவாகும் ஆதலால்
காளையிவ னென் றெண்ணுவார்
மனந்தனில் அறமிலா துலுத்தர்செய லிதுதர்ம
மன்னவர்க் கிவை யில்லையே.
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 77

### அமிர்த யோகம்

உத்திரத் திரயமு மோண மூலம்பூசம்
ஒளிர் ஞாயரில் வரினுமே
உரோகணி மிருகசிரம் புனர்பூசஞ் சோதியும்
உயர் திங்கள் வந்தாலுமே
உத்திரம்மூல முஞ்சேய் வாரஞ் சேர்ந்தாலும்
உத்திரா டமும் பூசமும்
உத்திரம் புந்தியில் சோதி மகமுங்குதிரை
உம்பர் குருவா ரமதிலும்
பத்திரம்வெள்ளியில் சுவாதி மகமுஞ் சோதி
பண்பான மூலமுந் தான்
பருதிமகன் வாரத்திற் கார்த்திகை மகஞ்சதையம்
பகருஜெஞ் சோதி வந்தால்
வத்திரஞ் செயவல்ல அமுதயோக முமாகும்
வளமான பி, எஸ். ஜி. யின்
மகிழ்கொண்ட ஸ்தாபனமும் உயர்வாமுமென் நாளும்
மங்களக் கரிவர தனே! 78

### எமகண்ட யோகம்

புவிதனில் எமகண்ட யோகங்கேள் ஞாயறிற்
பூரம் மகம்வந் தாலுமே
பூசமா யில்யமதி சேய்தன்னி லனுடமும்
புகழ்கிருத் திகையா லும்
சுவையுள்ள புந்தியில் மான்றலே யத்தமும்
சுரர்குருவில் தோணி மூலம்
சுக்கிரவா ரஞ்சோதி சகடுசேர்ந் தாலுமே
சுன்தன்னி லோண விட்டம்
பவுசில்லே யிவையெலாம் எமகண்ட யோகமாம்
பண்பான சுபசோ பனம்
பகருசெவி பூஷணம் பள்ளியி லோதலும்
பாரினில் இதை நீக்கிடு
வபிமான பி. எஸ். ஜி. குடும்பத்தலே வரெனும்
வல்லவேங்கிட பூமனும்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளேநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 79

## புருட கண்ட விதி.

ஜெகம்புகழும் மானிடர்கள் புருடர்கண் டந்தன்னைச்
செப்புவேன் ஜெனன முதலாய்
செயலாக யீராறு சோடச மிதன்மேலே
சோட னதசம் இரண்டும்
இகம்புகழு மெழுநான்கு மெண்ணூன்கு முப்பதும்
இதனோடு நாலு கொண்டும்
ஈதலா லையெட்டு மிதன்மே லிரண்டுவை
எழிலான நாற்பத்து நால்
அகம்புகழு மாறெட்டு மெண்ணேழும் அறுபது
அடைவான புருட கண்டம்
ஆதலால் இதையறிந் தவனியில் பரிகாரம்
அழகுட னியற்றி ஆயுள்
மகம் செய்த பி. எஸ். ஜி. மன்னன் கங்காபதி
மாந்தர்க்கு நூலுத வினர்
மகிழ்கொடு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 80

## வாஸ்து மனை முகூர்த்தம் செய்யுமிடம்.

வாஸ்த்துவிழி நோக்கமாய் மனைமுகூர்த் தஞ்செய்ய
வண்மை யாம்மனை தன்னையே
வகுத்திடு நாலேழு பங்கதாய்க் காலிலே
வைபதி னேழு தள்ளி
பார்த்திடுந் தலையினி லீரைந்து கொண்டுநடு
மங்கினில் முகூர்த்தஞ் செய்யில்
பார்த்திபர் யோகமாம் கால்தன்னில் வாயிலானல்
பத்தினிக் காகாது காண்!
கீர்த்தியிலை தலையானல் அவன்தோஷ மென்றிடு
கிளரு பின்முது காலே
கிளைகொண்ட வேந்தர்பகை வயிரானு லதிகசுகம்
கெண்ணிய வாழ்வு தருமே
வார்த்திடும் பி. எஸ். ஜி. கல்யாண மண்டபம்
வழங்கு வாரிது கண்டுமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 81

### வாஸ்து எழுந்திருக்கும் நாள்.

சித்திரையி லீரைந்து தேதிகன லந்தினில்
சிறந்த வைகாசி மூவேழ்
சேர்கடிகை இருநாலு ஆடிபண் ணென்றினில்
செல்கடிகை இரண்டென்பாயே
வைத்தஆ வணியாறு கடிகையேழ் மூன்றினில்
வளர்துலாம் பத்தோ டொன்று
வண்மையிரு கன்னலில் கார்த்திகை இருநாலு
வழங்கு மீரைந்து கடிகை
உத்திரத் தைபனி ரெண்டெட்டு கன்னலில்
ஒளிர் மாசியிரு பதாகும்
உயர்கன்ன லிருநாலின் மேல்வாஸ்த் தெழுந்திருந்
தோங்கு மைமுக் காலிலே
மத்திரம் பல்துலக்கல் ஸ்நானம் பூஜையுமேலே
மணி யுண்டி தாம்பூலமே
மகிழ்கொண்டு போஜனந் தாம்பூலங் கால்போட
மங்களக் கரிவர தனே! 82

### வீடுகட்டும் மாதங்கள்

செப்புசித் திரைமாதம் மனைகட் டினலது
செல்வமது சம மாகுமாம்
சிறப்புள்ள வைகாசி மனைகோல மிகுசுகம்
திருமகள் கூடி வாழ்வாள்
ஒப்புநல் ஆனியில் உயர்மாடங் கட்டினல்
உயர்புத்ரர் மிருத்தியு பயமாம்
ஒழுங்கில்லை ஆடியில் பாற்பசு செல்வமும்
ஒழிந்திடும் என்றறை குவாய்
இப்புவியில் ஆவணி பந்துஜென மேன்மையும்
இன்ப வாழ்வுண் டாகுமே
இயல்புரட் டாசியில் நோய்கடன் வாதையும்
இழிவுதரும் பொய் யல்லவே
மப்பிலா மயநூலை அப்புறம் அறைகுவேன்
மணிகொண்ட தர்மத் தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூனைகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 83

### வீடுகட்டும் மாதங்கள்

பாங்கில்லே ஐப்பசி மனைகோல ஆபரணம்
மகர்புத்ர தோஷ மாகும்
பாங்கான கார்த்திகை மிகுசெல்வ முண்டாகு
பதியினில் லக்ஷ்மி வாழ்வாள்
தீங்கான மார்கழியில் சேதமாந் திரவியஞ்
சேர்ந்திடும் ரோக வாழ்வு
திகழிலாத் தையினில் மரணமக் கினிவாதை
திரமாகத் தடுக்க லாகும்
நீங்காத செல்வமும் நிலையான வாள்வுதரும்
நிதிமாசி மாதந் தன்னில்
நிகரான பங்குனியில் ரத்ன பரணமும்
நீங்கிடும் லக்ஷ்மி என்பாய்
வாங்கிந்தப் படியாக மனைகட்டும் மாதங்கள்
மயன் சொன்ன தர்மத்தையே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 84

### மனைக்கு அகலம் வைக்கும் அடிகளின் பலன்

மனைக்ககலம் வைக்கும் படிக்கிங் கரைகுவாம்
மன்னும் ஆறடிநன் மையாம்
மத்திபம் ஏழுக்கு யிருநான்கு ராஜ்ஜியம்
மகிமையிலே நவம் வறுமையாம்
நினைக்கலாம் பத்துக்கு பாற்சோறு மிகவுண்டு
நிதிசுதர் களின்ன மொன்று
நிலேயில்லே ஈராறு சந்தானம் என்றுநீ
நேசமிலே யிவ்வை யகற்று
வினைக்கிடம் பதின்மூன்று ஈரேழில் நித்தியம்
விளங்கிடாப் பகை நேருமாம்
வெற்றியிலே மூவைந்து திதிவாங்கும் பதினறு
விளங்குவாள் லக்ஷ்மி கண்டாய்!
மணக்குமாம் பதினேழில் ஆக்கமிக உண்டாகும்
மதியோடு செய்த தர்மம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 85

மனைக்கு அகலம் வைக்கும் அடிகளின் பலன்

மூவாறுஅடி வைக்கில் தாழ்வாகும் ஆக்கமும்
முன்னில் ஒன்றுங் கூட்டினால்
முதலுண்டு சந்தான வியாகூலம் இருபதில்
முன்பொரு ளோடு கூடும்
மூவேழில் இருப்புக் குலைந்திடும் மேலொன்று
முனை எதிரியஞ் சுவானே
முயலுமிரு பத்துமூன் றடுத்தடுத்தே நோயாம்
முனிவான அறு நான்கினில்
சாவாகும் இல்லாளும் ஐயைந்து திருமாது
சஞ்சரித் திருமனை யினில்
சம்பத்தா மிருபத்து ஆறுதனில் எப்போதுந்
தந்திடுந் தன பாக்கியம்
மாவாளும் மூவொன்ப தரகாங்க வாழ்வாகும்
மன்னு ஸ்ரீரங்க விலாசம்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 86

மனைக்கு அகலம் வைக்கும் அடிகளின் பலன்.

நாலேழில் ஐஸ்வர்யம் மென்மேலும் பெருகுமே
நலமொன்று கூட்டி வைத்தால்
நளினசுற் றுமுமதிக பாக்கியஞ் சேருமே
நாளெல்லாம் நோய் முப்பது
பாலான முப்பத்து வொன்றிற்குத் துணைவிபோம்
பகரும் எண்ணான்கு வைத்தால்
பலவாகப் போன்பொருள் நிறைவாகச் சேருமாம்
பண்பாக ஒன்று சேர்க்கில்
சேலாழி மனைரெண்டு கட்டுவான் திருவில்லை
செப்புமுப் பத்து நாளில்
செல்வமிலை குடியோட்டும் ஏழைந்திலே நல்ல
ஜீவனஞ் செய்ய லாகும்
மாலாழி யாறுறில் சுகபாக்யம் ஓங்குமே
மங்கம் மாள்மண் டபத்தில்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 87

### இதுவுமது

சுகபாக்ய முப்பத்து ஏழினிற் பாற்பசு
சுந்தரச் சுதர்கள் விர்த்தி
சொல்லுமுப் பத்தெட்டிற் காரியம்ஆகாது
சொகுசுதான் இன்ன மொன்று
மிகயேக்கம் எதிரியால் திதிவாங்கும் என்றிடு
மிக்கநாற் பத்துக் கிது
மிளிருதன பாக்கியங் குபேரனுய் வாழ்வார்கள்
மிகையில்லை இன்ன மொன்றில்
சகபாக்யம் ஆறேழில் குடிகொள் வாள்லக்ஷ்மி
சாற்று நாற்பத்து மூன்றில்
தகுபாக்யம் இலையென்பாய்இதி லொண்று சேர்ந்திடில்
சஞ்சலம் நெஞ்சி லடைவான்
மகமாக்கு நாற்பத்து ஐந்தினில் சற்புத்ரர்
மகவாழ்வு தர்மத் திலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 88

### விருந்துண்ணல்.

வெஞ்சுடர் வாரத்தில் உறவுபோம் பகைநேரும்
விருந்து செய்துண் ணுது
வெண்மதிக் கதிநேசம் புகழுண்டு நன்மையாம்
விக்கினஞ் சேய் வாரமே!
விஞ்சுபுதன் றன்னிலே விருந்துண்ண உறவாகும்
வியாழனுக் கதிக பகையாம்
வெள்ளிதனில் உண்ணவே பந்ததிக நேசமாம்
வெகுநாளின் பகை தீருமாம்
மிஞ்சுசனி வாரத்தில் இருவர்மன மொத்திடும்
வெகுளியிலை யதி நேசமாம்
மென்மேலும் விருந்துசெய் துண்ணவே நன்றென
விப்பண்ண முறை செய்தனர்
மஞ்சுநிகர் பஞ்சாலை மதித்திடுஞ் செல்வமும்
மன்னர் புகழ்தர் மத்தையும்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 89

## காலையில் விழித்தவுடன் பார்க்க வேண்டுவன.

காலையிலெ ழுந்துகண் ணாடியைப் பார்த்தலும்
கைம்மாவுங் குதிரையுந் தான்
கஞ்சமலர் சிவலிங்கம் மேகஞ்சூழ் மலைகடல்
கன்றீன் றபசு விளக்கு
மேலெழு மிரவிபுகை இல்லாத அக்கினி
மிருதங்கம் மனைவி முகம்
மிக்கவிளை வான்பூ தன்னுடைய வலதுகை
மேன்மை செங்கோல் வேந்தரும்
நீலமயில் நடனமும் நெறியுடைய பிரபுவும்
நீலக் குரங்கு பித்தன்
நின்மல மனக்குரு நெற்கதிர் பொன்மணி
நிதியுடைய பெட்ட கந்தான்
மால்கொண்ட சர்வஜெனப் பள்ளிகைத் தொழிற்சாலை
மன்னு குருகுல வாசமும்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 90

## ஊருக்குப் போனவர் வரவு சொல்ல.

பூவினில் யாத்திரை போனவர் வருகின்ற
புனிதநாட் கேட்கில் அறைவாய்
புகழாக அன்னவன் போனநாள் முதலாக
பொருந்து மாதிரை எண்ணியே
மேவுதுகை நாலினிற் றாக்கிஎ ழுக்கிய
மிச்சம் ஒன்றுக்கு நின்றான்
மிளிரிரண் டிற்பக்கம் மூன்றுகா வலில்நின்றான்
மிகுநா லிற்பய்ண மானான்
தாவுமைந் தாகில்வந் திடையினிற் பிணிவந்து
தங்கினான் ஆறு காணில்
தகைமையாய் வழியினில் வருகிறா னேழாகில்
சாற்றிதோ வந்தா னென
மாவுடைய வேடநகர் தன்னிற் சுகாதார
மனைகட்டி வைத்த தாலே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 91

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### சுப சகுனம்.

வலியன்கரு டன்காடை கழுகுநாய் கிரியும்
வளர் உடும்பும் மர்க்கடம்
வழங்குபரத் வாஜமும் டேகைகோட் டானணில்
வல்லநா யிடம் உத்தமம்
இலகுசெம் போத்துகிளி கொக்கு மயில்ஓணன்
இனிய நரிபுனு குபூனை
எருமைபுலி யோடுவிச் சுளிநாரை யிவையெலாம்
இதமோடு வலமே நலம்
நலமலியும் வேதமந் திரங்குதிரை கனைத்தலும்
நகுஆந்தை கிளைக் கூட்டமும்
நாயுதரல் வேசரி மூஞ்சூரின் சத்தமும்
நலமாகக் கேட்க லாகும்
வலவையுள பி. எஸ். ஜி. மன்னர்செய் தர்மத்தில்
வந்திடும் இச்ச குணமே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவரதனே! 92

### இதுவுமது

வாயாசம் வலமானல் ஆயுசுவிருத் தியாம்
வழிபோக மிக்க நன்று
வல்லபோத் திடமானல் பேத்தடிவையாதே
வலமானற் சம்பத் துமாம்
நேயகரு டன்வலம் ஆனலே கட்டென்று
நிற்காதே கனமே தரும்
நிமிஷத்தி லிடமாන லெவர்க்கைப் பொருள்வந்திடும்
நீலவால் நீண்ட குருவி
காயும்வலம் இருந்திடம் ஆனலேகால் நடையர்
களர்தங்க தண்டி யேர்வார்
காடைகட் டிற்பாடை கட்டுமது இடமானல்
கனகமாங் குட்டிச் சுவர்
வாய்மைமிகு கலைதேர்ந்து முனிவருரை சகுணங்கள்
வழங்கு மித்தரு மங்களை
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 93

## இதுவுமது

கொடி-குடை சாமரை அட்சதைமா மிஷம்மறை
குடங்கள் தேன்ரிஷடம் யானை
குலவுமங்கள வாத்யம் மணக்கோலஞ் சுபவரிசை
குதிரை வண்ணான் மோழியே
நடனமிடு தாசிகன் னிகைசுப மாங்கலி
நல்லகனி வர்க்க கூடை
நவரத்ன மாசார விஸ்வப் பிராமணன்
நகர்மன் னர்பேரி வாத்யம்
படியிலிடு பூமாலை மஞ்சள்சந் தனபுஷ்பம்
பகருமிரு அந்த ணர்கள்
பன்னவர் பவனியும் பட்டாபி ஷேகமும்
பண்பாக எதிரில் வந்தால்
வடிவாகப் போகும்சுப காரியம் அனுகூலம்
வந்திடுந் தர்மத் தினால்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 94

## அப சகுனம்

ஓங்காரம் போடலும் காலிடரல் தலைதடவல்
உண்டுபோ வென்ன மொழிதல்
உங்களொடு வருவனெனல் எண்ணெய்த்தலை நாவிதன்
உயர்விலா விதவை கலகம்
பாங்கிலாத் தட்டான் வெறுங்குடம் நிர்வாணி
பன்றி உறுமல் பருத்தி
பயவேட தாரிமூக் கரையன்குருடன் நொண்டி
பயித்தியன் விறகு கட்டு
தீங்கான பேடிவிரி தலைமொட்டை வாணியன்
திருவிலாத் தூரமா னுள்
திகழொற்றைப் பார்ப்பான் இருசூத்தி ரார்களும்
திறமிலாக் கும்பா ரனும்
வாங்கு மிவரெதிரினில் வரலாகா தென்றனர்
மங்கம் மாள் மண்டபத்தில்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 95

## நட்புநிலை

அருணனுதிப் பதுயெங்கே அழகுதாமரை எங்கே
அதுகண்டு மலர்வ தென்ன
அம்புலிபிறப் பெங்கே குமுதமல ரெங்கேமுக
மழகுடன் விரிவ தென்ன
கருமைநிற மேகமெங்கே பச்சைமயி லெங்கே
கருத்தில் மகிழ்வ தென்ன
காரிருள் விடியுமுன் சேவலெங் கேயது
களிகொண்டு கூவு மன்றோ
திறமைமிகு அரசரெவ் விடமிருந் தாலவர்
திவ்யவிசு வாச மொன்றும்
திகழுநல் லோர்கவிஞர் எங்கிருந் தாலுமவர்
திடபக்ஷ மறவார்கள் காண்
மருமலர் சூடுமிப் பி. எஸ். ஜி. தர்மங்கள்
மன்னுமிப் பூவின் மீது
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 96

## தருமநூல் பதினெட்டு

ஜெகமதனில் தருமநூல் பதினெட்டுந் தெளிவாக
செப்பு வேனிது காண்பிரே
செயல்கொண்ட மனுஅத்ரி சிறந்திடும் விட்டுணு
சேர்வா சிட்டம் யாமமும்
இகமதனிலா பத்தம்பமொடு யாஞ்ஞவாக் கியமும்
இனியபரா சரமாங் கிரசம்
இணையிலா உசனமும் கார்த்யாய னத்தோடு
இசைவான சமவர்த் தனம்
சுகமதுள வியாசமும் பிரகற்சதி சங்கலிதம்
சுந்தர மிருந்தசா தான்மம்
துலக்கமுள கௌதமம் தக்கமொடு யிவையெலாம்
துகளிலாத் தரும நூலாம்
மகமதனில் வாஞ்சையாய் பி. எஸ். ஜி. தர்மங்கள்
மகத்தாகச் செய் வார்களே
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 97

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

### பதிணேண் புராணம்

புவிதனிற் பதிணெண் புராணங்க ளோதுவேன்
புனிதமுள மச்ச கூர்மம்
புகழ்வராகம் வாமனம் பதும மொடுநல்
பொருது வைணன பகவதம்
தவபிரமஞ் சைவலிங்கம் பௌ டீயமும்
தகுநார தீயங் கருடம்
தாருட்ய பிரமகை வர்த்தநற் காந்தமும்
தக்கமார்க் கண்டே யமும்
பவமிலா ஆக்நேயம் பிர்மாண்ட மீருக
பதிணெண் புராண மிதுவாம்
பாவலர்கள் நாவலர்கள் யாவரும் அன்பாக
படித்துணர்த லுசித மாகும்
மவுலிகொள் மன்னவரை வசமாக்கி எதிர்கொளும்
மாதீரன் செய் கல்லூரி
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 98

### உப புராணங்கள்

சிங்கார நாரசிங் கஞ்சனற் குமரமும்
செம்மை மிகுநா தீயம்
சிவதன்மந் தூருவாசம் நந்தி கேச்சுரம்
சேர் உசனங் காளிகம்
மங்காத வாருணம் சாம்பேசம் பராசரம்
மாபார்க் கவங்கா பிலமும்
மானவம் வாசிட்ட லிங்கம் சவுரம்
மாரீசம் பிர்மாண் டமாம்
சங்காதஉப புராணங்க ளிதுவா குமாம்
சதிரா யுரைத் தேனிது
தகுமென்று மிவையெலாம் ஓதுவார் பி. எஸ். ஜி.
தளகர்த்தர் எல்லோ ருமே
வங்கங் கலிங்கமொடு அங்கநா டிவையெலாம்
வழங்கிடும் வர்த்த கந்தான்
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 99

## பஞ்சவர் யோகம்

வல்லகக் கிரன்மணியும் உதயமாய் வந்துநல்
　　வளமான பூருவ த்தில்
　வாகான புதனோடு ஆதவன் கவிகூடி
　　மந்திரி யுஞ்சேய் கேந்திரம்
நல்லசனி இந்துகூட வர்த்தனை சேடனும்
　　நண்டுகண் டெதிர்த்தான் சிகி
　நற்கனக வேந்தனும் உற்றுயிர் விழிக்கவும்
　　நவில்நீலன் சுதன் வியத்தில்
வல்லவன் அதியோகன் நீதியிற் றருமனும்
　　வளர்கொ டையிலிவன் றமையனும்
　வண்மைமிகு பலமதில் அவன்றம்பி ஞானத்தில்
　　வடிவாக இவன் றம்பியே
மல்லிலா அஸ்வப்பரீ க்ஷையில் இவன்றம்பி
　　வளர்தர்ம நிலையத் திலே
　மகிழ்வாகி பி. எஸ். ஜி. கங்காமால் வணங்கிடும்
　　மங்களக் கரிவர தனே! 100

## முப்பத்திரண்டு தர்மம்

ஆதுலர்க் குச்சாலை ஓதுவார்க் குண்டியும்
　　அறுசம யத்தோர்க் குணவுமே
　ஆவிற்கு வாயுறை சிறைச்சோறு ஐயமும்
　　ஆனதின் பண்டம் நல்கல்
　அறவைச் சோறும்மகவு பெறுவித்தல் புவியினில்
　　அன்னியர் பிள்ளை வளர்த்தல்
　அதுவலாற் பிள்ளைபால் வார்த்தலும் பாரினில்
　　அறவைப் பிணஞ் சுடுதலும்
தீதிலாதற வைதூரியஞ் சுண்ணம் நோய்மருந்தும்
　　திவ்ய வண்ணார் நாவிதர்
　திகழுங் கண்ணாடிகா தோலைகண் மருந்துந்
　　தினந்தலைக் கெண்ணெய் தேய்த்தல்
　தெரிவையர் கள்போகமும் பிறந்துயர் கார்த்தலும்
　　செப்பு தண்ணீர்ப் பந்தலும்
　தெய்வமென வேவிளங் குந்தவசி ரேட்டர்கள்
　　தெள்ளெ னத்தங்கு மடமும்

## பி. எஸ். ஜி. தர்மஸ்தாபன ஸ்ரீ கரிவரதப் பெருமாள் சதகம்.

நீதியாந் தடங்காவு ஆவுறுஞ் சுதரி
நிகழ் விலங்கிற் குணவு மே
நிலையேறு வித்தலும் விலைகொண்டுயிர் காத்தலும்
நெறியா யலங் கரித்து
நிர்ணயக் கன்னிகா தானங் கொடுத்தலொடு
நிலையாய் முப்பத்து ரெண்டு
நீடுதவு தர்மமென முனிவருரை செய்தனர்
நிலைகொண்ட புவி யதனிலே
மாதுதிரு மங்கம்மாள் மருத்துவ சாலையுள
மணிபூளை மாநக ரிலே
மன்னுவார் குலந்தனில் காக்கலார் வமிசத்தில்
மதி யூகர் ஆகிவந்த
மகதீரர் பி. எஸ். ஜி. ஜி. மங்குத் தாய்கன்னிகா
மணஞ்செய்து வைத்தாரி தோ!
மகிழ்கொண்டு அருள்செய்த பூளைநகர் தன்னிலுறை
மங்களக் கரிவர தனே! 101

முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!